மாளிகை
சிரியர் :-
ல்லப்பாண்டியன்

வனமாளிகை

ஆசிரியர்:—

எஸ். செல்லப்பாண்டியன்.

"கிரீன்லாம்ப்" பப்ளிஷிங் ஹவுஸ்,
தென்காசி,
நெல்லை மாவட்டம்.

வெளியீட்டெண்:

பதிப்புரிமை

முதற்பதிப்பு—

தை 1985 வள்ளுவராண்டு (ஜனவரி 1954)

விலை 0—9—0

Printed at Sri Shunmugam Press, TENKASI.

வணக்கம்!

திராவிடத் தாயாக விளங்கும் முத்தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக திராவிடாரியக்கம் அரும்பாடுபட்டு ஏனைய திராவிட மொழிகளுக்கும் ஆக்கம் தேட அரும்பணியாற்றிவருகிறது. நமது தாய்மொழிக்கும் நமது திராவிடத்திற்கும் முதற் காணிக்கையாக இந்நூலைத் தருகிறோம். அறிவுக்குப் பொருந்தாத — ஆபாசமான சமயக் கருத்துக்கள், சனாதன சாக்கடைக் கொள்கைகள் மலிந்திருந்த காலம் மாறி, பகுத்தறிவுக்குப் பொருந்தக்கூடிய முறையிலே பயன் தரும் புதுமைக் கருத்துக்கள் இன்று திராவிடத்திலே மிளிர்கின்றன. புரட்சிகர எழுத்தோவியர்கள் பயன்தரா பழையனவற்றை பழித்தொழித்தும் புதுமைக் கருத்துக்களை வாரி, வாரி வழங்குகின்றனர். சுருங்கச் சொன்னால் இன்று பகுத்தறிவுத் தமிழ் புதுமையோடு பூரிப்படைகிறது. மறுமலர்ச்சி எழுத்தாளர்களால் நமது நாடும் மொழியும் பூரிப்படைகின்றன என்பதை யாரே மறுக்க வல்லார்? அத்தகைய மறுமலர்ச்சி எழுத்தோவியர்களிலொருவர்தான் திரு. **எஸ். செல்லப்பாண்டியன்** என்றால் மிகையாகாது. அன்னார் கதைகள், கட்டுரைகள், நாடகங்கள் முதலியவைகளை சுவைபடத் தீட்டுவதில் திறமைமிக்கவராகத் தோன்றுகிறார். அன்னாருடைய அருந்திறத்தை அன்னைத் திராவிடம் இன்னும் பூரணமாக அறியவில்லையே என வருந்துகிறோம். அன்னாருடைய எழுத்துலகப்பணி எழுச்சியூட்டுவதாகும். எழுச்சியுறும் திராவிடமும் தமிழும் அன்னாருடைய அரும்பணியை ஏற்றுக் கொள்ளட்டும் என வணங்குகிறோம்.

திராவிடத்தாயே! திராவிட நாடே!! திரு. எஸ். செல்லப்பாண்டியனின் தீரமிகு நற்பணியை ஏற்று ஏற்றம்பெற்று இனிதாக வாழ்க! வாழ்க!! என வணங்குகிறோம். முதற் காணிக்கையான "வனமாளிகை" யை ஏற்றுக்கொள் என வணங்குகிறோம். இனியும் இம்மாதிரியான காணிக்கைகளைத் தந்து நாங்கள் களிப்புக்கொள்ள, யாவரும் பேராதரவு தருமாறு வணங்குகிறோம்.

"வனமாளிகை" அட்டைப் படத்தை அழகு பெற அமைத்து புத்தகத்தை குறிப்பிட்ட நேரத்தில் அச்சியற்றித் தந்த ஸ்ரீ சண்முகம் பிரஸிற்கும், அட்டைப் படம் அழகுபெற பிளாக் செய்து கொடுத்த திரு. அனுமந்திரம் அவர்களுக்கும் எங்கள் வாழ்த்துதலையும் நன்றியறிதலையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

வணக்கம்.

"கிரீன்லாம்ப்" பப்ளிஷிங் ஹவுஸ்.

முன்னுரை.

ஆதிச்சநல்லூர் அளித்த தாழிகள், அரிக்கமேடும் முசிரியும் அளித்த நாணயங்கள், மொகஞ்சதாரோவும் ஹரப்பாவும் அளித்த பண்டைய நகரங்கள் முதலிய திராவிட நாகரீகத்தின் சின்னங்கள் திராவிட வரலாற்றைக் கூறுவனவாகும். கண் கவர் கட்டிடமான தாஜமஹால், ஷாஜஹான் — மும்தாஜ் வரலாற்றைக் கூறுவதாகும். மதுரை திருமலை நாயக்கன் மஹால், திருமலை நாயக்கர் வரலாற்றைக் கூறுவதாகும். கங்கைகொண்ட சோழபுரம், ராஜேந்திர சோழன் வரலாற்றைக் கூறுவதாகும். இவ்விதம் உலகமே நூலாகவிருந்து வரலாற்றைக் கூறிக்கொண்டிருக்கிறது. வனமாளிகையும் வரலாற்றைக் கூறுகிறது. மேற்கண்டவை உண்மை வரலாறுகள், ஆனுல் வனமாளிகையின் வரலாறு? படித்துப் பாருங்கள் வித்தியாசம் விளங்கும். வனமாளிகையின் வரலாறு உருக்குமனம் கொண்டோரையும் உருகச் செய்திடுமா? வனமாளிகை கற்பனையில் கட்டப்பட்டதா? உண்மையில் தோன்றியதா? மெய்யா? பொய்யா? படித்துவிட்டு நீங்களே பதில் தெரிந்து கொள்ளுங்கள். வனமாளிகையின் முன்னுரையில் வனமாளிகையைப்பற்றி சுருக்கமாகவோ அல்லது பெருக்கமாகவோ விளக்க வேண்டிய அவசியமில்லை என்றே நான் கருதுகிறேன். வனமாளிகையைப்பற்றிய தீர்ப்பை வாசகர்களே அளிக்க வேண்டும் என்ற என் அவாவைப் பூர்த்தி செய்வது வாசகர்கள் கடமையாகும். மேலும் மேலும் நான் எழுத்தாளர் — உலகில் ஏற்றம்பெற யாவரும் எல்லா வகையிலும் உதவுப்படி கேட்டுக்கொள்கிறேன். நம் தாய் மொழிக்கும், நம் தாயகத்திற்கும் எல்லா வகையாலும் நான் சேவை செய்வேன். அச்சேவையை ஊக்குவிப்பது உங்கள் கடமையாகும். வனமாளிகையை புத்தக வடிவில் உருவாக்கி உங்களுக்கு அளித்த அன்பர்கள் அனைவருக்கும் என் நன்றி.

வர்ழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே!
மாண்புகள் நீயே! என் தமிழ்த் தாயே!
வீழ்வாரை வீழாது காப்பவள் நீயே!
வீரரின் வீரமும் வெற்றியும் நீயே!

வணக்கம்!

ஆசிரியன்.



ஆசிரியர்:

எஸ். செல்லப்பாண்டியன்.

போட்டோ: ராஜகுரு ஸ்டுடியோ, தென்காசி

வனமாளிகை உரைக்கும் வரலாறு கேளீர்!!

மாநிலம் புகழும் மறத் தமிழ்நாடு! தென்றல் வீசும் பொதியமலை! மலைவளம் மண்டிக்கிடக்கிறது! மரங்கள், செடிகள், கொடிகள் நிறைந்த வனங்கள் பல! வனங்கள் பலவற்றிலும் சிறந்த வனம் வசந்த வனம்! வசந்த காலத்தில் வசந்த வனத்தின் வனப்பை வரையும் வல்லுநர் யாரும் உண்டோ? எங்கும் பச்சை மயமென சோலைகள்! பலப்பல வர்ண ஜாலம் செய்யும் மலர் வகைகள்! 'சல சல'வென ஓடிப்பாயும் நீரோடை! குயிலோசை! கிளிமொழி! களிப்பூட்டும் கனிவகைகள்! இவைகளால் இறுமாப்புக் கொண்ட நிலையில் இருப்பதுதான் வசந்த வனம். வசந்தவனத்தின் பெருமைக்கு அணிகலனாய் விளங்குவது ஒரு தனிப்பெரும் மாளிகை! தமிழகம் பொதியமலையால் பெருமையடைய, பொதியமலை, வ்ளம் நிறைந்த வனாந்திரங்களால் பெருமையடைய, வனாந்திரங்கள் வசந்தவனத்தினால் பெருமையடைய, வசந்தவனம் ஒரு தனிப்பெரும் மாளிகையினால் பெருமை கொண்டால் அம்மாளிகையின் பெருமையை அறிவது அவசியமன்றோ? மாளிகையின் பெருமைக்கு முடியணியாய் விளங்குவது எது? வெற்றிலையில் வைத்த சுண்ணம் போன்று பசுஞ்சோலையில் படைக்கப்பட்ட வெண்சுவர் மாளிகையே, உன் பெருமையைக் கூறுவாயா? மாளிகைக்குப் பேசும் ஆற்றல் அமைந்திருக்குமானால் அத்தனையையும் சுவைபடக் கூறியிருக்கும்!

வனமாளிகையை வைத்த கண் வைத்தபடியே பாருங்கள்! மாளிகையின் வனப்பிலே மூழ்கிவிடாமல் மாளிகையின் ஒவ்வொரு அங்கத்தையும் அசையாது நோக்குங்கள்! வனமாளிகையின் பெருமையைக்கூறும் கல்வெட்டுக்கள் ஏதாவது கூறுகிறதா? "அன்பு நிலையம்", "அமுதபுரி ஜமீந்தார்" என்று கல்வெட்டுக்களில் காணப்படுகின்றனவே! மாளிகையின் பெருமை இதுவல்லவே! மாளிகையிற் காணும் மதில்சுவர், சலவைக்கற்கள்,

மரக்கட்டைகள், இரும்புச்சாமான்கள் — இவைகளில் எதுவும் மாளிகையின் பெருமையைக் கூறப்போவதில்லை!

அதோ மாளிகையின் பெருமைச் சின்னம்! ஆம்! மாளிகையின் மறுபக்கத்தில் நிற்கும் சிறு மரமும் அதில் படர்ந்திருக்கும் முல்லைக்கொடியும் மாளிகையின் பெருமைச் சின்னங்கள்! தலைவி, தலைவனின் தோள்மீது சாய்ந்திருப்பது போன்று அம்முல்லைக் கொடி, அச்சிறுமரத்தில் அப்படிப் படர்ந்திருக்கிறது! உண்மையில் மாளிகையின் பெருமை இதுதான்! என எவரும் இயம்பி விடலாம். மாளிகையின் அழகுக்கெல்லாம் அழகு செய்வது போன்று அம்மரமும் அம்முல்லைக்கொடியும் அவ்வாறு அற்புதமாக அமைந்திருக்கின்றன இக்காரணத்தினுல்தான் எவரும் மாளிகையின் பெருமை, மரமும் கொடியும் என்று இயம்பிவிடலாம். சிறுமரம் — அதில் படர்ந்த முல்லைக்கொடி — இவற்றின் அழகு அல்ல மாளிகையின் பெருமை! இவற்றின் அழகுதான் அம்மாளிகைக்கு பெருமை என்ருல், ஏன், அம்மாளிகை மங்கிய வொளியோடு காட்சியளிக்க வேண்டும்? மாளிகையின் வெளியே இயற்கைச் சுடரொளி! மாளிகையின் உள்ளே இருள்! மாளிகையின் வெளியே, மயில், குயில், மான் முதலிய இயற்கைத் தோழி பெற்ற செல்வங்கள்! மாளிகையின் உள்ளே ஆந்தை வசிப்பது மல்லாமல் அலறுகிறது! வெளியே களிப்புக்காட்சி! உள்ளே சோகக்காட்சி! வெளியே இயற்கையின் இன்னிசை! உள்ளே சோகக்கீதம்! வெளியே நறுநாற்றம்! உள்ளே துர்நாற்றம்! மாளிகையின் உண்மை நிலை இப்படி! உள்ளமொன்று வைத்து புறமொன்று புகலும் புல்லர்கள், இருளை தன்னிடம் வைத்து ஒளி வீசும் வெண்ணிலா, உடல்நோயை ஆடையால் மறைப்பவன், புனுகு பூசிய புண் — இவைகளை மாளிகைக்கு உவமானமாகச் சொல்லலாம். மாளிகையின் நிலை எப்படியிருப்பினும் அதன் பெருமையொன்று அங்கேயே மறைந்து கிடக்கிறது பெருமைக் குரியவற்றை நினைந்து ஒருபுறம் இன்பம்! ஒருபுறம் துன்பம்! என்ற நிலையில் மாளிகை காட்சியளிக்கிறது! சோகச் சம்பவத்தால், மனதிலே துன்பமடைந்து புறத்திலே பார்ப்பவர்களுக்கு, இன்பமடைவதுபோல் பாசாங்கு செய்பவர்கள் நிலையில்தான்

மாளிகை காட்சியளிக்கிறது. என்ன விந்தை? இன்பமும் துன்பமும் கலந்த அப்பெருமை என்னவோ?

வனமாளிகையருகிலுள்ள அழகான சிறுமரத்தருகே செல்லுங்கள்! அதன் மீது படர்ந்திருக்கும் முல்லைக்கொடியை நோக்குங்கள்! தலைவன் அரவணைப்பிலே மெய் மறந்திடும் தலைவி போன்ற முல்லைக்கொடியை உற்று நோக்குங்கள்! முல்லை மலர்களை உதிர்க்கிறதா முல்லை? ஆம்! மலர்களை நுகர்ந்திடுங்கள்! முல்லைமலரின் மணத்திலே ஏதோ களங்கம்! சிறு மரத்தையும் முல்லைக்கொடியையும் தொட்டும் பாருங்கள்! நீர்த்துளிகள்! வெறும் நீர்த்துளிகள்? அல்ல, அல்ல! அவைகள் கண்ணீர்த்துளிகள்! ஏன்? எப்படி? அவைகளுக்கடியிலே புதைக்கப்பட்டிருக்கும் வரலாற்றை அறிந்தால் எல்லாம் விளங்கும்! அவ்வரலாறு, மனித சமுதாயத்தால் தீட்டப்பெற்று, மனிதர்களால் வனமாளிகையிலே நாடகக்கலையாக அரங்கேற்றப்பட்டு பூமிக்கடியிலே புதைக்கப்பட்டு விட்டது. புதைத்த இடத்தில் சிறு மரமும் முல்லைக்கொடியும் வளர்ந்து விட்டன. வரலாறு நாடகமாக அரங்கேற, தான் நாடகமேடையாக இருந்த காரணத்தினல் மாளிகைக்கு பெருமையும், வரலாற்றின் முடிவு சோகத்தின் சாயலாக இருந்த காரணத்தினல் மாளிகைக்கு கவலையாகவும் இருக்கிறது. எனவேதான் மாளிகை, இருவகை நிலையில் காட்சியளிக்கிறது.

கழிந்த வரலாறு, வருங்காலத்தவருக்கு ஒரு பாடமாக இருக்கட்டும் என இயற்கை அழைக்கிறது. மானிட சமுதாயத்தை அறைகூவி அழைக்கிறது இயற்கை. வனமாளிகை வரலாற்றின் சின்னமாக இருந்து வரலாற்றை உணர்த்துகிறது. அதன் அழகுச் சிறுமரம் தலையசைத்து ‘ஆம்’ என்கிறது. அதில் படரும் முல்லைக்கொடி கைகூப்பி வணங்குகிறது வரலாறு கேட்க வருவோரை! ‘வருக! வரலாறு அறிக!’ என மயில் நடனம் புரிகிறது. ‘வாரீர்! வனமாளிகை உரைக்கும் வரலாறு கேளீர்!’ என கிளி, கனிமொழியில் வேண்டுகோள் விடுக்கிறது. குயில், இசையமுதில் வேண்டுகோள் விடுக்கிறது. பொதியமலைத் தென்றல், செய்தியொலியை ஏந்தியவாறே வீசுகிறது. வாரீர்! வன

மாளிகை உரைக்கும் வரலாறு கேளீர்!! என இயற்கையே வேண்டுகோள் விடுக்கிறது.

வாரீர்! வனமாளிகை உரைக்கும் வரலாறு கேளீர்!!

முத்தம், முத்தத்தை வென்றது!

வசந்த காலம்! அப்போது பொதியமலையின் பொலிவைக் கேட்கவும் வேண்டுமா? வசந்தவனம்! அங்கே எத்தனை விதமான இன்பக்காட்சிகள்! நீலவானம், நிலவை முத்தமிடுகிறது! முகில் கூட்டம், மலைமுகட்டை முத்தமிட, மழைத்துளிகள், மரஞ்செடி, கொடிகளை முத்தமிட, தென்றல், அன்றலர்ந்த மலர்களை முத்தமிட, ஆண்புரு, பெண்புருவை முத்தமிட, ஆண்மான், பெண் மானை முத்தமிட, வசந்தவனம் பெருமிதத்தோடு காட்சியளித்தது. வசந்த காலத்தில் வசந்த வனத்தில் இயற்கை, முத்தத்தின் பொருளை விளக்கியது. விளக்கமறிந்தவர்கள் அனுபவாயிலாக அறிய முற்படமாட்டார்களா? முற்படுவார்கள் என வனமாளிகைக் காட்சி, விடை பகரும்வண்ணம் பொலிவுற்றது. ஏன்? வனமாளிகையிலே வயது வந்த காதலர் இருவர், இயற்கை விளக்கும் முத்த விளக்கத்தையறிந்து மெய்மறந்தனர்; இடத்தை மறந்தனர்; இவ்வுலகத்தையே மறந்துவிட்டனர்; காதல் உலகிலே உலாவினர்; இருவரும் முத்தங்கள் பல பரிமாறிக்கொண்டனர். காதலரின், காதல் லீலா விநோதங்களைக்கண்ட வெண்ணிலா, வெட்கம் மேலிட மேகக் கூட்டத்தினுள் 'நாணிக்கொண்டு நடு வீட்டிற்குள் நகரும் நங்கை' போன்று சென்றுவிட்டது நாணத்தக்கவற்றைக் கண்டு நங்கையொருத்தி நகர்ந்தால், அதைத் தொடர்ந்து எல்லா நங்கையரும் நகர்ந்து விடுவர், காதலரைக் கண்டு நாணமுற்ற வெண்ணிலா மறைய, அதைத் தொடர்ந்து முகில், மழைத்துளி, புரு, மான் முதலியன 'வெட்கம்' என்னும் விநோதக்காரனல்

விரட்டப்பட்டு மறைந்தன. நங்கையருள் நாணம் மறந்த நங்கையில்லையா? தென்றல், நாணமற்ற நங்கைபோன்று மறையாது காதலரை நோக்கியவாறே வீசியது.

"கட்டிளங்காளையும், கட்டிளங்குமரியும் கல்யாணமாகு முன் காதல் லீலை புரிவது கூடாது" எனக் கண்டனமெழுப்பி, தண்டனை தரும் பெற்ருேர் போன்று இயற்கை பெற்ருேர், இயற்கை காதலர்மீது கோபம் கொண்டனர் போலும்! கார்முகிற்கூட்டங்கள் வானத்தை மறைத்தன. இருள் கவிய ஆரம்பித்தது. மின்னல் மின்னியது. பேரிடிச் சப்தம்! காதலர் திடுக்கிட்டனர்; காதல் உலகிலிருந்து பூவுலகிற்கு புறப்பட எத்தனித்தனர்; கடைசி முத்தத்தை பரிமாறிக்கொண்டனர்.

திடீரென பேரிடியோசை! காதலர் இருவரும் 'ஐயோ!' என அலறினுர்கள்! இடி சப்தம் நிற்காது தொடர்ந்தது! காதலர் அலறி அலறி அழுதனர்! ஏன் அலறினர்? இடியால் தாக்குண்டனரா? இடியால் அல்ல! அடியால் தாக்கப்பட்டனர்! ஆம்! சவுக்கடியால் தாக்கப்பட்டனர்! ஐயகோ! சவுக்கு, 'என் முத்தங்களையும் பெற்றுக்கொள்ளுங்கள்!' என காதலரின் அங்கங்களை முத்தமிட்டது. சவுக்கு கொண்டடிக்கும் அந்த சண்டாளன் யார்? செல்வப்பட்டி ஜமீந்தார் சதானந்தம்! காதலர்மீது கொண்ட கோபத்தால் சவுக்கடி சேவை செய்தார். "கட்டுங்கள் இந்தக் கள்ளக் காதலனை!"—ஜமீந்தார் உத்தரவு. உடனே காதலன் கயிற்றினுல் கட்டப்பட்டான், சவுக்கு மேலும் முத்தமிட்டது. தன்னையும் முத்தமிடட்டும் எனக்கருதி காதலியும் அவனுடன் நின்ருள்; ஆனுல் பலவந்தமாக அப்புறப்படுத்தப்பட்டாள். அடி நின்றது! ஆனுல் காதலன் மயக்கமுற்ருன். "ஐயோ! முகிலன்! முகிலன்!" என அவள் அலறினுள். "கோகிலா! என் குலத்தின் களங்கமே!" என ஜமீந்தார் உறுமினுர்; சினந்து கொண்டார். முகிலனின் மூர்ச்சை தெளிவிக்க பணியாட்கள் படாதபாடு பட்டனர். முகிலன் மூர்ச்சை தெளிந்துவிட்டான், ஜமீந்தார் கோபாவேசத்துடன் நின்று கொண்டிருந்தார். கோகிலம் நடுநடுங்கிக் கொண்டிருந்தாள். தந்தை

கோபம் தணிய ஆரம்பிக்கவும் மகள் கோபம் கொழுந்து விட்டெரிந்தது. கெஞ்சியும் மிஞ்சியும் முகிலனை மறக்கும்படி தந்தை, மகளை வேண்ட, மகள் மறுத்ததுமல்லாமல், "மணந்தால் முகிலனை மணப்பேன், இல்லையேல் மரணம்!" என எச்சரிக்கை வேறு செய்தாள். அவள் உறுதியை மாற்ற ஜமீந்தார் செய்ததெல்லாம் வீணனது. ஏற்றம்-தாழ்வு காரணம் காட்டினர்; ஆசை காட்டினர்; அடுக்கடுக்காக அநேகம் அடுக்கினர். முடிவில் தோல்வி ஜமீந்தாருக்குத்தான். தோல்விக்குக் காரணம்? பிள்ளைப்பாசம்! நடந்தவற்றிற்கு வருந்தி, முகிலனை அவிழ்த்துவிட்டு ஆறுதல் கூறி, மன்னிப்பு வேண்டினர் ஜமீந்தார்; "முகிலன்—கோகிலம் திருமணம்!" என அவரே தன் வாயால் கூறினர் பளப்பளப்பான மோட்டார் கார் வனமாளிகை வெளியரங்கிலிருந்து புறப்பட்டது. "அத்தான் முத்தம், சவுக்கின் முத்தத்தை வென்றது" என எண்ணி மகிழ்ந்தாள் கோகிலம். "கோகிலாவின் முத்தம், சவுக்கின் முத்தத்தை வென்றது" என எண்ணி மகிழ்ந்தான் முகிலன். மோட்டார் கார், செல்வப்பட்டி அரண்மனையை அடைந்தது.

கண்ணீராகியது பன்னீர்.

காலைக்கதிரவன் கண்விழித் தெழுந்தான். அதைத்தொடர்ந்து அவனியும் கண்விழித்தெழுந்தது. பொதியமலையில் புத்தொளி வீசியது. கதிரவன் வரவைக்கண்ட சோலை 'கணவன் வரவைக்கண்ட காரிகை' போல் களிப்புக்கொண்டது. வசந்தவனம் பெருவனப்புடன் காட்சியளித்தது. வனமாளிகை வந்தாரை வரவேற்கும் வரவேற்பாளராக காட்சியளித்தது. வனமாளிகையின் வரலாற்றின் முதல் அத்தியாயம் ஆரம்பமாகியது எனலாம். அதன் ஆரம்பவிழா அமோகமாக நடைபெற்றது. திருமண விழா!—இதுதான் வனமாளிகை உருவாகிய பின் நடைபெற்ற விழா! வனமாளிகையின் திறப்பு விழாவை உள்ளடக்கிய திருமண விழா, வனமாளிகை வரலாற்றிலே முதலிடம் பெற்றது.

திருமணவிழா ஆரம்பமாகியது. அற்புதமாக அலங்கரிக்கப்பட்ட அழகான பந்தல்! அதனுள் அழகின் பிரதிபிம்பமாக மணமேடை! மணமேடையைச் சுற்றி மக்கள் கூட்டம்! மணமேடையிலே மணமக்கள், மகிழ்ச்சியொளி வீச வீற்றிருந்தனர். திருமணச்-சடங்கு ஆரம்பமாகியது. நறுமணம் கமழ, நற்றமிழ் இசை இசைக்க, நறுமணம் பொருந்திய பன்னீர் மழை, மக்கள் கூட்டத்-தின்மீது பொழிய, திருமணவிழா ஆரம்பமாகியது. மணமகன், கையிலே மாங்கல்யத்தை மகிழ்வுடன் எடுத்தான். மேள தாளங்கள் முழங்கின: மக்கள் கூட்டம் ஆரவாரம் செய்தது; மங்கை-யர் முத்துப்பற்களைக் காட்டி சிரித்தனர். மணமகன், மாங்கல்-யத்தை மணப்பெண் கழுத்தருகே கொணர்ந்தான். மாங்கல்யத்தை முடித்திட வேண்டியதுதான் பாக்கி. திடீரென்று 'நிறுத்துங்கள்!' என்ற ஓர் உத்தரவு! அல்ல ஒரு சிங்கத்தின் குரல்! மணமகன் திகைத்தான்! மணமகள் இடியோசை கேட்ட நாகம் போலா-னாள்! மேளதாளங்கள் நின்றன! மக்கள் கூட்டம் திகைத்தது! மங்கையர் கூட்டம் திகைத்தது! அமைதி குடி புகுந்தது! அனைவரும், அக்குரல் வந்த திக்கை நோக்கினர். மணமகள் தந்தை ஆத்திரத்துடன் வந்தார். எல்லோரும் கேள்விக்குறி-யோடு அவரை நோக்கினர். அவர் ஆத்திரத்துடன் மணமேடைக்-குச் சென்றார். மணமகளை, கரம்பற்றி இழுத்துச் சென்று அப்பு-றம் அனுப்பினர். மணமகன் தலைகுனிந்தவாறே தன் கையிலே-யுள்ள மாங்கல்யத்தை நோக்கினான். "ஏமாந்தவனே எழுந்தி-ருந்து போ!" என மாங்கல்யம் கூறுவதுபோன்றிருந்தது. திடீ-ரென்று எழுந்திருந்தான்; மணமகள் தந்தையாரிடம் சென்று, "நிறுத்து!" என்று கூறி, திருமணத்தை நிறுத்தக் காரணம் என்ன?" என்று கேட்கும் பாவனையில் அவர் முன் நின்றான். அவர், அவனையும் அனைவரையும் அலட்சியமாகப் பார்த்தார். "என் மகள், என்போன்ற ஏற்றம் பெற்றவரின் மனைவியாகப்-போகிறாள்" என மணமகள் தந்தை கூறினர் எல்லோரும் "சே, சே!" என்று கூறி வெளியேறினர் சம்மதித்து விட்டு, சமயத்தில் சதி செய்த மணமகள் தந்தையின் மூளையை என்ன-வென்று சொல்லுவது? மணமகன் நடைப் பிணமாகச் சென்றான்.

மணமகள், மாளிகையினுள்ளிருந்தபடியே கண்ணீர் விட்டழுதாள். பிள்ளைவீட்டார் எதுவும் சொல்ல முடியாது வெளியேறினர். பெண் வீட்டார், மாளிகையில் மணப்பெண் தந்தையிடம் மறு திருமண விழாவைப்பற்றி வினவினர். கோலாகலமான திருமணம் ஏன் அலங்கோலமானது? திருமணம் திகைப்பாய் இருந்தது—ஏன்?

திருமணம் முகிலன்—கோகிலாவிற்கு! ஆம்! ஜமீந்தார் சதானந்தத்தின் சம்மதத்தின்பேரில்தான் திருமணவிழா நடைபெற ஏற்பாடாகியிருந்தது பின், ஏன் திருமணத்தை நிறுத்தினர்? மேனாட்டு சுற்றுப்பிரயாணத்தின்போது மாண்டுபோனதாகக் கூறப்பட்ட ஜமீந்தார் சதானந்தத்தின் சகோதரியின் சற்புத்திரன்—அமுதபுரிச் ஜமீந்தார் செல்வன் அகிலன் அன்று திடீரென்று திருமணவிழாவிற்கு வந்ததே காரணம். ஜமீந்தார் சதானந்தத்தின் இளைய சகோதரன் சமரன் 'முகிலன்—கோகிலா' திருமணத்தை ஆரம்பமுதலே அடியோடு வெறுத்து வந்தான். திடீரென்று வந்த அகிலனை வரவேற்று சதித்திட்டம் தீட்டினான். சதானந்தத்திடம் 'முறைப்பெண்' என்ற வார்த்தையில் ஆரம்பித்து, 'நிறுத்தி விடுங்கள்' என்ற வேண்டுகோளை விடுத்து, 'முகிலா என் மனைவி' என முடித்துவிட்டான் அகிலன். சமரன் ஆமோதித்தான். சதானந்தமும் ஆமோதித்தார். ஆனால் கோகிலம்? முகிலன்—கோகிலா மணமேடையில் காட்சியளிக்க மூவர் முறையற்றம் தீட்டினர். அதை நிறைவேற்றவே 'நிறுத்து!' என்ற இடியோசை எழுந்தது.

இயற்கை இடிக்கு அஞ்சாத வனமாளிகை 'நிறுத்து!' என்ற இடியோசையைக்கேட்டு கிடுகிடுத்தது. வசந்தவனம் வாடியது: வாடாமலர்களும் வாடின. வனமாளிகைப்பந்தல் வளமற்றுக் காட்சியளித்தது.

மணப்பெண் கோகிலம் கண்ணீர் சிந்தியழுதாள். கண்ணீர்த் துளிகள் அவள்மீது தெளிக்கப்பட்ட பன்னீர்த் துளிகளோடு ஒன்று கலந்தன. அவள் அல்லற்பட்டு ஆற்றாது

அழுதாள். அந்தக் கண்ணீரால் பன்னீரெல்லாம் கண்ணீராகியது! கண்ணீராகியது பன்னீர்! அதனுல் யாருக்கு, என்ன தீங்கு வரப்-போகிறது? வனமாளிகை வரலாற்றிலே ஆரம்பப்பகுதி பன்னீ-ராகவிருந்து. பின்பு கண்ணீராகியது. 'கண்ணீராகியது பன்னீர்!' என வனமாளிகை வருந்தியது; வருந்திக்கொண்டே யிருந்ததா?

எதிர்பாராத முடிவு

'அகிலன் – கோகிலம் திருமணவிழா' என மணவோலை மறத்தமிழ் நாடெங்கும் அறிவித்தபடி, அந்த நாளும் வர, ஒரு நாள்தான் மீதமிருந்தது. அந்த ஒரு நாளும் கழித்துவிட்டால் மறுநாள் திருநாள்! திருமணத்திற்கு முந்திய நாள் பெண்ண-ழைப்பு வைபவம்! செல்வப்பட்டியிலிருந்து பெண்ணையழைத்து வர கார் விரைந்தது. அகிலன் அதில் கார் ஓட்டியாகயிருந்து, காரை படுவேகமாகச் செலுத்திச் சென்றுன். பொதியமலை செல்லும் பாதையில் புழுதியை கிளப்பியவாறே கார் பறந்தது; வளைவுப் பாதைகளையெல்லாம் கடந்து, வசந்தவனப் பாதையை யும் கடந்து, வனமாளிகையை அடைந்தது. சமரன், அகிலனை வரவேற்றுன். அகிலன், ஆச்சரியத்தால் அடிபட்டவன்போல் அப்படியே மலைத்து நின்றுவிட்டான். சமரன் முகத்தில் தென்-பட்ட சோகக்குறியே அகிலன் ஆச்சரியத்திற்கு காரணம். சமரன் தன் பேச்சுவன்மையினுல் அகிலன் ஆச்சரியக்குறிகளை அழித்து விட்டான் மணப்பெண்ணிற்கு வேண்டிய நகைகள், பட்டாடை-கள், பலவர்ண மலர்கள், பற்பல புதுமைப்பொருள்கள் ஆகியவை-கள் சகிதம் அகிலன் மாளிகையினுள் சென்றுன். ஜமீந்தார் சதானந்தம் வேண்டா வெறுப்பாக அகிலனை வரவேற்றுர். அகிலனுக்கு எதுவும் புரியவில்லை. அகிலன் பெண்ணழைப்பை ஞாபகம் மூட்டினுன். ஜமீந்தார் ஏதோ சொல்ல வாயெடுத்தார். ஆனுல் நிறுத்திக்கொண்டார். சமரன், உள்ள விஷயத்தை மறைக்காது உரைக்கும்படி ஜமீந்தாரை வேண்டினுன். ஒரு

மட்டும் படாதபாடு பட்டவாறே ஓரேவரியில் ஒருபோடு போட்டார் ஜமீந்தார். அந்த ஒருவரி அகிலன்மீது அரிவாளால் வெட்டுவது போன்றிருந்தது. அகிலன் திகைத்தான். அவன் திகைக்கும்படி ஜமீந்தார் என்ன சொன்னார்? "கோகிலத்தை தங்களுக்கு திருமணம் செய்ய மறுக்கிறேன்"—இதுதான் அந்த வரி! எப்படியிருக்கும் அகிலனுக்கு? வரியை மாற்ற இடிமுழக்கம் செய்தான் அகிலன்; துடித்தான்; எச்சரிக்கை செய்தான். ஆனால் வரியில் மாற்றமே இல்லை. "மகள் சம்மதிப்பாள் என நினைத்து, அன்று அவள் திருமணத்தை நிறுத்தினேன். ஆனால் அவள் முகிலனைத் தவிர வேறு யாரையும் விரும்ப மறுப்பதுமல்லாமல் மீறி வேறு யாருக்கும் விவாகம் முடிக்க முயற்சித்தால் தற்கொலை செய்துகொள்ளுவாள்"—இவ்வாறு ஜமீந்தார் பலமுறை புகன்றார். 'திருமணவோலையை வெளியிடும் முன் ஜமீந்தார் கூறவில்லையே' என அகிலன் தனக்குள் ஆத்திரமடைந்தான்; வெளிப்படையாகவும் தன் ஆத்திரத்தைக்காட்டினான். அவன் ஆத்திரத்தைக் கண்டு ஜமீந்தார் ஆத்திரத்தில் அகிலனைப்பற்றிய உண்மையொன்றைக் கூறினார். படமெடுத்தாடும் பாம்பாக மாறிய அகிலன் உடனே அடிபணிந்து விட்டான். "பஞ்சமா பாதகன்!" இதன் பொருள், விளக்கம், கருத்து யாவும் அகிலன் என்பதை ஆதார பூர்வமாகக் கூறியதுமல்லாமல், இந்த உண்மை திருமண நிச்சயித்திற்கு பிறகுதான், அவர் அறிந்ததாகவும், அதன் காரணமாக இந்த முடிவிற்கு வந்ததாகவும் ஜமீந்தார் சொற்பொழிவாற்றினார். இத்தருணத்தில் சமரன், ஜமீந்தார் அறியாதவாறு அகிலனை நோக்கி, ஏதோ ஜாடையாகக் கண்களைச் சுழற்றினான். உடனே அகிலன் தன் போக்கை மாற்றிக்கொண்டான். "கோகிலம் எண்ணப்படியே திருமணம் நடத்துவதுதான் முறை. நானே அதை முன்னின்று நடத்துவேன். நான் தவறாக நடந்ததுபற்றி மன்னிக்கவும். நான் நாளை வேறு பெண்ணை மணந்தே தீருவேன். என் வனமாளிகையிலே சில காலம் தங்கப்போகிற காரணத்தினால், தாங்கள் தயவு செய்து வனமாளிகையை விட்டு குடும்ப சகிதம் செல்வப்பட்டி செல்லும்படி வேண்டுகிறேன்" என அகிலன் அன்பு ததும்பக் கூறினான்.

ஜமீந்தார் திகைத்துவிட்டார். ஆனால் அகிலன் வேண்டுகோளை நிராகரிக்கவில்லை. அகிலன் விடைபெற்றுக்கொண்டான். ஜமீந்தார் குடும்பம், செல்வப்பட்டிச் செல்ல முயன்றது. 'எதிர் பாராத முடிவு' என ஜமீந்தார் தனக்குள் கூறிக்கொண்டார். அகிலன் அதே முறையில் கூறிக்கொண்டே அமுதபுரிக்குச் சென்றான்.

கூண்டிலே கிளி!

மாலைக் கதிரவன் மலைவாயில் புகுந்தான். மாலை மதி மகிழ்வுடன் மலர்ச்சோலைமீது வெண்ணிற வொளிவீச ஆரம்பித்-தது. மலர்ச்சோலையிலே மலர் மணத்துடன் மெதுவாக மதுரமான தென்றல் வீசியது. அதோடு மதுரகீதமும் மிதந்து வந்தது. மலரும் அதன் மணமும் போன்ற காதலரிருவர் மெய்மறந்தபடியே 'புல் கம்பள" மீது அமர்ந்திருந்தனர்; ஏதேதோ பேசினார்கள்; சிரித்தார்கள்; கீதமிசைத்தார்கள்; பல தீர்மானங்களை தீட்டினார்-கள். செல்வப்பட்டி ஜமீந்தார் பூங்காவிலே மேற்கண்ட காதற் காட்சி! காதலரிருவரையும் கண்டு வெண்ணிலா பெரிதும் மகிழ்ந்-ததோ என்னவோ? வெண்ணிலா மிகவும் பிரகாசமாக வீசியது வெண்ணிற வொளியை! விண்மீன்கள் கண் சிமிட்டின காதலரை நோக்கி! எவ்வளவு நேரம்தான், அவர்கள் அங்கே அப்படி ஆனந்தமாக இருக்கமுடியும்? 'பெற்றோர் பிரியமுடன் தேடுவரே' என எண்ணியபடியே இருவரும் எழுந்தனர் "மறு திருமணம்!" என மாற்ற முடியாத தீர்மானத்துடன் காதலன் விரைந்து சென்று விட்டான். "ஏமாற்றம் இனி கிடையாது, கட்டாயம் கல்யாணம்" என அவள் அடிக்கடி கூறிக்கொண்டாள். அவள், அவள் பார்வையினின்று, அவன் மறையும்வரை, அவன் சென்ற திக்கை நோக்கியபடியே நின்று கொண்டிருந்தாள். காதல் நாடகம், மலர்ச்சோலையிலே இவ்விதம் நடைபெற்றது. முகிலன் கதாநாயகன்! கோகிலம் கதாநாயகி! கண்டு களித்தது மலர்ச்-சோலை! கதாநாயகன் அல்லது கதாநாயகி, கயமைப் பாத்திரம்

தாங்குபவனுல் கவலேயும் கண்ணீரும் பெருக கடுந்துன்பம் அடைவதுண்டு. 'முகிலன்—கோகிலம் காதல் நாடகத்திலே கயமைப் பாத்திரம் கிடையாதோ' என மலர்ச்சோலே மனவாட்டம் கொண்டது. 'மலர்ச்சோலேயின் மனவாட்டத்தை போக்க வேண்டும்' என்று ஒரு உருவம் கருதியது போலும்! மலர்ச் சோலேயிலே கோகிலம் நின்றுகொண்டிருக்கும் திசையை நோக்கி அப்பயங்கர மனித உருவம் மாறுவேடத்தோடு மறைந்து' மறைந்து வந்தது.

கோகிலம், 'முகிலோடு கொஞ்சும் முழுமதி' யைப் பார்த்தவாறே காதற் கற்பனே செய்து கொண்டிருந்தாள். "கற்பனே போதுமடி" என்று கூறிஞற்போன்று மறைந்து வந்த உருவம், அவள்மீது பாய்ந்தது. அவள் அலறிஞள். ஆஞல் அவ்வுருவம் அவளோடு அதிவேகமாக மறைந்தது. 'சோக நாடகத்தைக் கண்டு கண்ணீர் விடும் நங்கை' போன்று மலர்ச்சோலே காட்சி யளித்தது. மறுநாள்! 'கோகிலத்தைக் காணவில்லே!' யென்ற செய்தி, செய்திப் பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் மின்னின. முகிலன் துயரக்கடலில் மூழ்கிஞன். அவன் மட்டுமா மூழ்கிஞன்? சதானந்தம் மூழ்கிஞர் துயரக்கடலில்! அவர் குடும்பமே மூழ்கியது. அவருடைய உறவினர்களும் மூழ்கினர். மலர்ச்சோலேயும் மூழ்கியது. பெண்மைக்கு பெருமை தரும் வண்ணம் பெண்டிர் விடுதலேக்கு கோகிலம் உழைத்த காரணத்திஞல் பெண்பாலார் யாவரும் துயரக்கடலில் ஆழ்ந்தனர். துயரக் கடலில் மூழ்கியவர்களே காப்பாற்றும் பொருட்டு கோகிலத்தைக் கண்டுபிடிக்க ஆட்கள், படை படையாகச் சென்றனர்.

'ஆடு நனேகிறதே' என ஓநாய் ஓலமிட்டதாம்! 'மான் மனவாட்டம் கொள்கிறதே' என புலி புலம்பியதாம்! 'புருவைக் காணவில்லேயே' என பருந்து வருந்தியதாம்! எலிக்கு என்ன ஆபத்தோ?' என பூனே கண்ணீர் விட்டதாம்! இக்காட்சி செல்வப்பட்டியிலும் நடைபெற்றது.

ஜமீந்தார் அரண்மனேயிலே இக்காட்சி! அகிலன், 'கோகிலத்தைக் காணவில்லேயே' என வருந்திய காட்சிதான்

அத்திருக்காட்சி! 'ஆடு தன் துயரத்தை ஓநாயிடம் கூறுவது போல்' சதானந்தம், அகிலனிடம் அளவிட முடியாதபடி வருந்தினர். அகிலன், சமரனோடு காணுமற்போன கன்னி கோகிலத்தை தேடி வர, புறப்பட்டுச் சென்றனன்.

திருடன், தான் திருடிய பொருளை மறைத்துவிட்டு, பொருளை பறிகொடுத்தவரிடம், 'நான் திருடப்பட்ட பொருளை மீட்டுத்தருகிறேன்' என்று கூறி நடிப்பதின் மூலம், தன் திருட்டுத் தனத்தை மறைக்க முயலுவதுபோல் அகிலன் அவ்வளவு அருமையாக நடித்தான். அவன்மீது சந்தேகம் எழக்கூடாது என்ற காரணத்திற்காக சதானந்தத்திடம் சாதுர்யமாக நடந்து கொண்டான். ஆனல் கோகிலத்தைத் திருடிக்கொண்டு சென்றது அவனேதான்! அவனுக்கு ஆதரவு அளித்தது சமரன்!

கோகிலம் வனமாளிகையிலே வாட்டத்தோடு உலாவினுள். முன்பு அங்கே அவள் சுதந்திரக் கிளியாக உலாவினுள் அவளுடைய பெற்றோருடன் ஆனல் தற்போது? இருட்டறையிலே கூண்டுக்கிளியானுள். வனமாளிகை சிறைச்சாலையாகியது! வசந்த வனக் கிளிக்கூட்டம் 'கூண்டிலே கிளி! கூண்டிலே கிளி!' என கிளிமொழியில் அடயமிட்டு ஆருத்துயரடைந்தன. கோகிலம், வனமாளிகை இரகசிய அறையிலே அழுதுகொண்டேயிருந்தாள்; தற்செயலாக சுவரின்மீது தீட்டப்பட்ட ஓவியத்தைக் கண்ணுற்ருள். 'கூண்டிலே அடைபட்ட கிளியொன்று விடுதலையாகி வெளியேறுவது' போன்று ஓவியம் தீட்டப்பெற்றிருந்தது. கோகிலத்திற்கும் விடுதலை கிடைக்காமலா போகும்? இவ்வாறு எண்ணியவாறே கோகிலம் சிறிது ஆறுதலடைந்தாள்.

——●——

காதலா? கடமையா?

குற்றம் பல புரிந்தோர் குணசீலர்களாக காட்சியளித்து, களிப்புக்கொண்டு உலாவுவதும், குற்றமற்றவர்கள் குற்றவாளிக்

கூண்டிலே நிறுத்தப்பட்டு கொடுமைக்குள்ளாவதும் இவ்வுலகத்தின் விந்தையான காட்சிகள். கோகிலாவைக் காணவில்லை! அதற்குக் காரணம் யார்? ஏன்? எவ்விதம்? இவ்வாறெல்லாம் ஜமீந்தார் சிந்தித்தாரா? தீர விசாரித்தாரா? இல்லை! வெறி பிடித்தவன்போல் வெகுண்டு எழுந்தார் ஜமீந்தார் அவருடைய கோபத்தை பன்மடங்காக்கினான் அகிலன். "கோகிலாவைக் கொண்டு சென்றது முகிலன்தான்!" என அகிலன் அடாதபழியை முகிலன்மீது வீசினான். சமரன் அதற்கு ஆமோதிப்பு வழங்கத் தவறவில்லை.

ஜமீந்தாரின் கோபம், அகிலனின் வஞ்சகப்பேச்சு, சமரனின் சதி ஆமோதிப்பு—இவைகள் முகிலனை இழுத்து வந்தன; மரத்தில் பிணித்தன; சவுக்கடிகள் தந்தன; குருதியைக் குடித்தன. "நிரபராதி!" என்ற வார்த்தையைத் தவிர வேறு எதையும் முகிலன் கூறவேயில்லை. "அநியாயமாக ஒருவன் அடிபடுகின்றானே! அவன் துயரத்தை துடைத்து, அநீதியைக்கொன்று நீதியைக்காப்போமே" என்று "அவன்" கூட வரவில்லை. அகிலன், முகிலன் கண்ணீர்த் துளிகளை அலட்சியம் செய்தான். கண்ணீர்த்துளிகளை அலட்சிய படுத்தியோர் அடைந்த முடிவை அவன் அறியவில்லை!

"எப்படியாவது கோகிலத்தை கொண்டு வருவேன்; இல்லையேல் மாண்டு போனாலும் போவேனேயொழிய மீண்டு வருவதில்லை!" என முகிலன் மொழிந்தான். அகிலன், அன்பு காட்டி, அடியை நிறுத்தவில்லை. சதானந்தம், கருணை காட்டினார். சமரன் 'சரி' என ஆமோதித்தான். எச்சரிக்கையோடு முகிலன் விடுதலை செய்யப்பட்டான். 'விதியின் விளையாடல்! அதனால் வேதனை! வேதனை!!'—இவ்வாறு முகிலன் நினைக்கவில்லை. 'மதி மழுங்கியவர்களின் சொல் விதி' யென்பதை அவன் அறியாதவனா? எல்லாம் எவனோ ஒருவனின் சதி என்பதை எண்ணியவாறே செல்வப்பட்டியைவிட்டு வெளியேறினான். விடுதலையடைந்து வெளியேறும் அவன் காதுகளில் விடுதலைக்கீதம் புகுந்தது. திரும்பிப்பார்த்தான். 'நமது நாடு நமக்கே!' என முழங்கியவாறே

மக்கட் கூட்டம், அல்ல, மக்கட் கடல் திரண்டெழுந்து வருவதை முகிலன் கண்டான். வாழ்விழந்த நாட்டை வாழவைக்க, வழி வகுக்கும் விடுதலைப் படையைக் கண்டதும் அவனது கவலை பறந்தோடியது; கண்களினின்றுவரும் கண்ணீர்த்துளிகள் காய்ந்தன, ஒளியிழந்த அவன் முகம் ஒளி வரப்பெற்று பொலிவுற்றது. நாட்டின் விடுதலைப்போருக்குப் புறப்பட்டான்; "நில்!" என்ற குரல் கேட்டு, திகைத்து திருப்பினன்; இரு கேள்விகள் கண்டு கலங்கினன். காதல் பெரிதா? கடமை பெரிதா? இதுதான் அக்-கேள்விகள். காதலை பெரியதாக மதித்திருந்தால் அவன், கோகிலாவை தேடி வரப்போயிருக்க வேண்டும்; கடமையை பெரியதாக மதித்திருந்தால் விடுதலைப் படையில் கலந்திருக்க வேண்டும் அவன் திகைத்தான்; சிந்தித்தான்; பலமுறை சிந்தித்-தான்; ஓர் முடிவுக்கு வந்தான். காதலும் கடமையும் ஒன்று! கடமைக்கு முதலிடம்! காதலுக்கு இரண்டாமிடம்! இதுதான் அவன் முடிவு! "நமது நாடு நமக்கே!" என முழக்கமிட்டவாறே விடுதலைப்படையில் கலந்தான்; வீராவேசத்துடன் விரைந்து சென்ருன் விடுதலைப்படையோடு.

——●——

கோகிலா! கோகிலா!!

அன்று வனமாளிகை வறட்சியாகக் காட்சியளித்தது 'மணாளனை யிழந்து வாடும் மங்கை' போன்று வனமாளிகை காட்சியளித்தது. 'துக்கங்கொண்டாட வருவோர்' போன்று கார்மேகங்கள், வனமாளிகையின் உயரத்திலே ஒன்று கூடின. எங்கும் அமைதி குடி புகுந்தது. ஆனல் வனமாளிகையிலே அமைதி இல்லை! அழுகுரல்! கண்ணீர்!! வனமாளிகை இரகசிய அறையிலே கோகிலம் அழுகுரல் எழுப்பினள்; கண்ணீரைச் சிந்தினள். பயன் என்ன? அவள் பாதுகாப்புக் கைதிதானே? வனமாளிகை இரகசிய அறையின் அமைதியின்மை, வசந்த வனத்தின் அமைதியை கெடுக்க முடியவில்லை. 'முடியாமையை முடியவைக்க வேண்டும்' என்ற நோக்கத்தோடு மோட்டார்கார்

விரைந்து வந்தது. வனமாளிகையில், வரவேற்பு வழங்குவதற்கு யாரும் இல்லை! மோட்டார் அதைப்பற்றி ஏன் கவலைப்படப் போகிறது?

காரிலிருந்து மூன்று மனித உருவங்கள் இறங்கின. கவலை-யோடுவரும் மனித உருவிற்கு களிப்பூட்டிய வண்ணம் மற்ற இருவுருவங்களும் வனமாளிகையினுள் புகுந்தன.

வனமாளிகை மாடி வாயிலில் ஒரு உருவம் நின்று விட்டது. மற்ற இரு உருவங்களும் மாடியை அடைந்தன. அங்கு-மிங்கும் உலாவியவாறே ஏதேதோ பேசின; மாடியின் மேல் தளத்திற்கு சென்றன; கார்முகிற் கூட்டத்தை நோக்கியவாறே உரையாடலைத் தொடர்ந்தன. மாடியின் மேல்தளத்தின் கைப்-பிடிச் சுவரின்மீது காலை வைத்தபடியே ஒரு உருவம் ஏதேதோ பேசியது; அங்கிருந்து கீழே பள்ளத்தாக்கையும் பார்த்துக் கொண்டே பேசியது; திடீரென்று அவ்வுருவம் திகைத்தது; குரல்கேட்டு கீழே குனிந்து நோக்கியது; குரலைப் புரிந்துகொண்டு, திரும்பி தன் அருகில் நிற்கும் உருவத்தை கோபக்கண்களோடு பார்க்க முயற்சித்தது ஆனல் முடியவில்லை! ஏன்? ஏன்? மாடி-யின் மேல்தள உச்சியிலிருந்து கீழே வீழ்ந்து விட்டது? தானுக தவறி விழவில்லை! அருகே நின்ற உருவம் தள்ளிவிட்டுவிட்டது! அதோடு வெற்றி பெற்றுவிட்டதாக மனதில் மகிழ்ச்சிகொண்டது. மாடி வாயிலில் நின்ற உருவமும் அம்மகிழ்ச்சியில் பங்கு கொண்-டது. இருவுருவங்களும் கீழே உற்று நோக்கின. 'கோகிலா! கோகிலா!' எனக் கூவிய வண்ணமே கீழே விழுந்த உருவத்தின் ஆவி உலகை விட்டுப் பிரிந்தது. அக்கூக்குரல் வனமாளிகை வனமுழுவதும் சென்று எதிரொலித்தது. வசந்தவனமே 'கோகிலா! கோகிலா!!' என கூக்குரலிட்டது போன்றிருந்தது.

கீழே விழுந்திறந்த மனித உருவம் செல்வப்பட்டிஜமீன்-தார் சதானந்தம்! மாடியின் மேல்தளத்திலிருந்து கீழே தள்ளிய மனித உருவம் சமரன்! ஆம்! உடன் பிறந்தே கொல்லும் வியாதி-யாகிய அவன்தான்! அவனுடன் வந்த மனித உருவம் அகிலன்—கயமையின் திருவுருவம்!

சமரன் ஜமீன் பதவிமோகம், சமரன் அகிலன் கூட்டுச் சதிக்கு காரணமாகவிருந்தது. 'மகளைக் காணவேண்டும்' என்ற ஆவல் ஜமீந்தாரை அச்சதியின் பிடியில் சிக்கும்படி செய்துவிட்டது. மாடியின் மேல்தளத்தில் வைத்து 'எங்கே கோகிலம்?' என்று வினவியபோது கோகிலாவின் அழுகுரலும் புலம்பலும் காதுகளில் ஒலிக்கவே, கூட்டுச்சதியை அறிந்து விட்டார் சதானந்தம். "சதியையறிந்து விட்டானே சதானந்தம்! தாமதிக்காது சதானந்தத்தை பலியிடு" எனச் சமரனின் சதிகார மனக்குரங்கு தூண்டியது. குரங்கு மனம் படைத்தவன் குணசீலனாகவா இருப்பான்? எனவே ஜமீந்தார் சதானந்தம் சாவின் கையிலே சிக்கி விட்டார்.

சமரன், 'ஜமீன் பதவி கிடைத்து விட்டதே' என உள்ளூற உவகை கொண்டான். உலகை ஏமாற்ற, "என் அண்ணா, வனமாளிகை மாடியிலிருந்து தவறி விழுந்து விட்டாரே!" என நடிப்புக் கண்ணீர் விட்டான். ஏமாந்த உலகம் அவன் கண்ணீரை நம்பி விட்டது. "செல்வப்பட்டி ஜமீந்தார் சதானந்தம், வனமாளிகை மாடியிலிருந்து தவறி விழுந்து விண்ணுலகையடைந்தார். அவர் சகோதரன் சமரன் சோகக்கடலில் மூழ்கினார்."— இவ்வாறு உலகம் உளறியது. காதலனைப் பிரிந்து வாடும் கோகிலம் தன் தந்தை பிரிவால் மேலும் கவலைக் கடலில் ஆழ்ந்தாள். "காதலனை அடைவேன்!" என அவள் தனக்குள்ளே கூறிக்கொண்டாள். இந்த நம்பிக்கைதான் அவளை காப்பாற்றியது.

சமரன் செல்வப்பட்டி ஜமீந்தாரானான். ஜமீந்தார் தாசர்களின் வாழ்த்தொலியோடு சமரன் ஜமீந்தாரானான். "சமரன் வாழ்க!" என வாழ்த்துக்கீதம் எங்கும் பரவியது. அக்கீதத்தை யழிக்க "சமரன் ஒழிக!" என்ற முழக்கமெழுந்தது. எங்கிருந்து அம்முழக்கம் எழுந்தது? சமரன் மனச்சாட்சியிலிருந்துதான்! 'கோகிலா! கோகிலா!!' எனக் கூறியவாறே கூடப்பிறந்தவன் சாகும்படி செய்த சண்டாளா! நீ ஒழிக!!" என அவன் மனச்சாட்சி, ஒழிக முழக்கத்தை எழுப்பியது. தன்னையுமறியாமலே

சமரன், 'கோகிலா! கோகிலா!!' எனக் கத்தினுன். இதைப்-பார்த்த உலகம் "ஆகா! சகோதரன் மகள்மீது என்ன பாசம்!" என வியந்தது.

——○——

சதிக்குள்ளே சதி!

நள்ளிரவு! செல்வப்பட்டியை நித்திராதேவி தாலாட்டிக் கொண்டிருந்தாள். செல்வப்பட்டி நன்ருகத் தூங்கி விட்டது. ஆனல் ஒரே ஒரு உருவம் மட்டும் தூங்காமல் மாளிகைத் தனி அறையில் உலாவிக்கொண்டிருந்தது. எதையெல்லாமோ எண்ணி, எண்ணி ஏங்கிய அவ்வுருவம், ஆலோசனை செய்துகொண்டே அங்குமிங்கும் உலாவியது, திடீரென அவ்வுருவம் திகைத்து நின்றது. திடீர் ஞானம் பெற்ற ஞானிபோன்று மகிழ்ச்சி கொண்டது அவ்வுருவம். "செல்வப்பட்டி ஜமீந்தார் அமுதபுரி ஜமீந்தாராகுவார்" என அவ்வுருவம் தனக்குள்ளே கூறி மகிழ்ந்-தது. அவ்வுருவம் சமரன் தான் என்பதை சொல்லவும் வேண்டுமோ? சதியால் செல்வப்பட்டிக்கு ஜமீந்தாராகியதுமல்-லாமல் அமுதபுரி ஜமீன்மீதும் மோகம் கொண்ட சமரன், சதித் திட்டம் தீட்டினுன். திட்டத்தை தீட்டியவுடன், அதை நிறை-வேற்றவும் துணிந்துவிட்டான்.

மோட்டார்கார் புறப்பட்டது; அமுதபுரி நோக்கி விரைந்து சென்றது. சமரன் நோக்கத்தை அதுவும் அறிந்து கொண்டதுபோலும்! அவ்வளவு வேகமாகச் சென்றது அக்கார்; அமுதபுரி அரண்மனை முன் சென்று நின்றது. அகிலன், சமரனை வரவேற்று மாடிக்கு அழைத்துச் சென்ருன். இருவரும் மாடியின் தனியறையை யடைந்தனர். "கோகிலம் உன் காதலியாக, சம்ம-தம் தந்து விட்டாள்" என சமரன் சாந்தமாகச் சொன்னுன். அகிலனுக்கு திகைப்பும் உவகையும் சொல்லமுடியாத அளவுக்கு உயர்ந்தன. "ஆனுல்........" என்று சமரன் சொல்லிவிட்டு சிறிது தயங்கியதும் அகிலனுக்கு தூக்கிவாரிப் போட்டது

போலிருந்தது. "உன் மனைவி சுகிலம் சொர்க்கம் போகாமல் கோகிலம் உன்னையடையமாட்டாள்" இதுதான் ஆறுலுக்கு பின் வந்த பகுதி. சமரன் இவ்விதம் ஆறுலில் ஆரம்பித்து முடித்தான்; அதோடு 'அகிலன் தயங்குவான்' என நினைத்தான். சமரன் ஆச்சரியப்படும்படியாக ஒரு வரியை வாரி வழங்கினுன் அகிலன். "கோகிலாவை அடைய கோடி உலகங்களை வேண்டுமானுலும் கொன்றுவிடத் தயார்" என அகிலன் வீரமாகப் பதில் அளித்தான். 'அகிலனை எப்படியாவது தயக்கத்தில் ஆழ்த்தவேண்டும், என்று சமரன் நினைத்தானே, என்னவோ? அகிலன் கூறி முடிந்ததும் சமரன் 'ஒரு நிபந்தனை!' என்று ஆரம்பித்தான். அகிலன் அதற்கும் சம்மதித்தான். "மேனுட்டு சுகவாசபுரிக்குச் சென்று காதல் வாழ்வு நடத்த சம்மதித்தால்தான், கோகிலா தன் அன்பை அளிப்பாள்" என சமரன் நிபந்தனையைக் கூறினுன். அகிலன் ஆமோதித்தான். "மேனுடு சென்று விட்டால் அமுதபுரி ஜமீந்தாராகவிருப்பது யார்?" என்று சமரன் தயங்கியவாறே கேட்டான். "சமரன்தான்" எனச் சுருக்கமாகப் பதில் அளித்தான் அகிலன். இருவரும் பலப் பல பேசினுர்கள்; சிரித்தார்கள்; கேள்விகளை எழுப்பிவிட்டு அவைகளுக்கு விடைகளையும் அளித்தார்கள்; கூட்டுச் சதித்திட்டம் ஒன்றை வகுத்தார்கள்.

"சுகிலத்தை வஞ்சகமாக மேனுடு செல்ல அழைத்து செல்லுவதுபோல் சென்று வஞ்சகமாக கொன்றுவிட்டு, கோகிலாவுடன் மேனுடு சென்றுவிட வேண்டும். சமரன், அகிலன் மீண்டு வரும்வரை அதிகார பூர்வமாக அமுதபுரி ஜமீந்தார் பதவியை வகித்து வரவேண்டும்" – அவர்கள் அற்புதமாகத் தீட்டிவிட்டார்கள் இத்திட்டத்தை. இச்சதித்திட்டத்தை அகிலன் பூரணமாக நம்பிவிட்டான். சதித்திட்டத்திற்குள்ளே சதித்திட்டமிருந்ததை அவன் அறியவில்லை. சதிக்குள்ளே சதி! இவ்வாறு பல தடவை சமரன் மனம் தானுகவே உணர்ந்து கொண்டது. சமரன் சதியை அடுத்த பகுதியில் தருவோம்.

———(●)———

ஆட்டைக் கொன்ற ஓநாயின் உயிரைக் குடித்த புலி.

பௌர்ணமி! நீலவானத்திலே நிலா, ஒளியை வீசியவாறே பொலிவுடன் புன்னகை பூத்தது. விண்மீன்கள் சில மின்னிக் கொண்டிருந்தன. கார்முகிற் கூட்டமும் வெண்முகிற் கூட்டமும் நீலவானப் பாதையிலே உலாவிக் கொண்டிருந்தன. பொதியமலை நிலவொளியில் மயங்கிக் கிடந்தது. வசந்த வனத்திலே இனிதாக நறுமணம் நிறைந்த பூங்காற்று வீசியது. பூங்காற்றிலே காதல் கீதம் மிதந்து வந்தது. கீதம் வந்த திசையை வசந்த வனம் நன்ருக உற்று நோக்கியது. வனமாளிகை மாடியின் மேல்தள முகட்டிலே காதலரிருவர், காதற்கீதம் பாடி களிப்புக்கொண்டிருந்தனர்.

பாடல் முடிந்ததும் காதலி கீழேயுள்ள பள்ளத்தாக்கை பயத்துடன் பார்த்தாள். காதலன் "வான்மதியைப் பார்! விண்மீனைப் பார்! கார்முகிலைப் பார்! வசந்த வனத்தைப் பார்! வனமாளிகையைப் பார்! பள்ளத்தாக்கையும் பார்!" என காதலியைத் தூண்டினுன். எனவே அவள் பள்ளத்தாக்கை உற்று நோக்கினுள்; திடீரென்று மாடியிலிருந்து பள்ளத்தாக்கிலே விழுந்து விட்டாள். "ஐயோ! அம்மா!" என்ற குரலோடு காதலி, பள்ளத்தாக்கிலே விழுந்திறந்து விட்டாள். "காதலி போய் விட்டாளே!" எனக் காதலன், கண்ணீர் சிந்தினுனு? அவன் களிப்புக் கொண்டான்! ஆம்! அவன் தானே, அவளை மாடியிலிருந்து கீழே தள்ளியது! ஐயோ! காதலன் அவ்வளவு கொடியவனு? ஆம்!

காதலியைக் கொலை செய்துவிட்டு, காதலன், மாடியின் மேல் தள முகட்டிலே நின்று கொண்டிருந்தான்; பள்ளத்தாக்கை குனிந்து நோக்கினுன்.

"பாரடா பயங்கரவாதி! உன்னை நம்பிய பாவை பரிதாப மரணமடைந்து விட்டாளே!" என பள்ளத்தாக்கு பேசுவது

போன்றிருந்தது. அவன் பார்வை, பள்ளத்தாக்கை விட்டுவர மறுத்தது. அவ்வண்ணமே அவன் அசையாது பார்த்துக் கொண்டிருந்தான். திடீரென ஓர் உருவம் அவன் பின்னுல் வந்து நின்றது; சுற்றுமுற்றும் பார்த்தது; திடீரென அவனை கீழே தள்ளி விட்டது. அதிசயித்தவாறே அக்காதலன் அப்பள்ளத்தாக்கில் வீழ்ந்து மாண்டு போனுன். கொலைகாரன் கொலை செய்யப்பட்டான். காதலர் இருவரும் இயற்கை யெய்தியதை அவ்வுருவம், ஆனந்தமாக எண்ணி எண்ணி இறுமாப்புக்கொண்டது. அவ்வுருவம் யார்? இறந்துபோன காதலன் யார்? காதலி யார்? இறந்த காதலி அகிலன் மனைவி சுகிலம்! இறந்த காதலன் அகிலன்! அகிலனைக் கொன்றது சமரன்! இதுதான் சமரன் சதிக்குள்ளே செய்த சதி! இது அதன் முடிவு! "சுகிலாவைக் கொன்று கோகிலாவுடன் கூடிக் குலாவலாம்" என அகிலன் நினைத்து, சதி செய்தான். அவன் அவ்வாறு சதி செய்வதற்கு காரணம் சமரன் கூறிய பொய்யான வார்த்தைகள். "முகிலா சம்மதித்து விட்டாள்! நிபந்தனை!" இவ்வாறு கூறியதெல்லாம் பொய்! நம்பிய அகிலன், அவனை (சமரனை) அமுதபுரிக்கு ஜமீந்தாராக்கிவிட்டு, சுகிலாவை மேனுடு செல்ல அழைத்து செல்லுவது போல் வனமாளிகைக்குச் சென்று, அவளைக் கொலை செய்துவிட்டான். சதிகாரச் சமரன் அகிலனையும் கொன்றுவிட்டான். "செல்வப்பட்டிஜமீந்தார் அமுதபுரி ஜமீந்தாராகுவார்" என்று அவன் நினைத்த எண்ணம் நிறைவேறி விட்டது. அவன் எண்ணம் அகிலன் — சுகிலம் பலியை விரும்பியது. பலி நிறைவேற்றப்பட்டுவிட்டது. பலனும் கிடைத்துவிட்டது.

மகிழ்ச்சி கொண்டவாறே சமரன் மேல் தளத்திலிருந்து இறங்கி மாளிகை மாடியினுள் புகுந்தான். திடீரென திகைத்து நின்றுன். ஏன் திகைக்க வேண்டும்? சுவரின் மீதிருந்த ஒரு ஓவியம் அவன் கண்களில் படவே திகைத்தான். அவன் திகைக்கும் வண்ணம் அந்த ஓவியம் அவ்வளவு அற்புதமாக தீட்டப்பட்டிருந்தது. ஆடு ஒன்றை ஒரு ஓநாய் கொல்ல, அந்த ஓநாயை ஒரு புலி கொல்ல, அந்தப் புலியை ஒருவன் துப்பாக்கியால் சுட்டு வீழ்த்த- இவ்வாறு அச்சித்திரம் காட்சியளித்தது சமரன் அச்சித்திரத்தை

105267

நோக்கியவாறே நின்றுகொண்டிருந்தான். அவன் மனக்கண் முன்னே ஒரு காட்சி தென்பட்டது. சுவரிலே தீட்டப்பட்ட சித்திரத்தின் பிரதிபலிப்பாக அவன் மனதிலேயும் ஒரு காட்சி! சுகிலாவை அகிலன் கொல்ல, அகிலனை சமரன் கொல்ல, சமரனை யாரோ கொல்லத் துணிய — இக்காட்சியை அவன் கண்டான். "என்னைக் கொல்ல எவரால் முடியும்?" எனக் கூறிக்கொண்டான். ஆனால் சுவரில் தீட்டிய சித்திரம் அவனைப் பார்த்து புன்னகை புரிந்தது.

———(●)———

முகமூடி மனிதர்கள்.

முகமூடி மனிதன்! அவன் தோழனும் ஒரு முகமூடியணிந்திருந்தான். இருவரும் பொதியமலை செல்லும் பாதையில் தாமதித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் தாமதத்திற்குக் காரணம்? அவர்கள் சென்ற கார் நகர மறுத்தது. ஒருவன் காருக்கேற்பட்ட கோளாற்றை நீக்க முற்பட்டான். மற்றவன் காவலாக நின்றுகொண்டு சுற்றுமுற்றும் நோக்கினான். ஒருவரையும் காணவில்லை. இருவரும் முன்பக்கமுள்ள இயந்திரத்தை பழுது பார்க்கத் தொடங்கினர்.

இத்தருணத்தில் அருகேயுள்ள புதரில் இலை தழைகள் அசைய ஆரம்பித்தன. அதனுள்ளிருந்து ஓர் மனித உருவம் மெள்ள வெளிவந்தது; சப்தம் ஏதுமின்றி சாகசமாக காரின் பின்புறம் வந்தது; சுற்றுமுற்றும் நோக்கியவாறே காரின் பின் பகுதியில் மறைந்து கொண்டது. அம்மனித உருவம் காரில் பதுங்கிக் கொள்ளவும் முகமூடிகள் காரில் ஏற்பட்ட கோளாற்றை நீக்கிவிட்டனர். கார் நகர ஆரம்பித்தது; மலைப்பாதையில் வேகமாகச் சென்றது. முகமூடிகள் பேசிக்கொண்டே சென்றனர். "வன மாளிகை! சமரன்! கோகிலம்! அகிலன் மறைவு! சமரனின் புதிய ஆவல்!" இவைகளைப்பற்றி விரிவாகப் பேசிக்கொண்டே சென்றனர். 'அவர்களுடைய பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைக்கவேண்டும்' என்ற நோக்கத்தோடு ஒரு சப்தம் கேட்டது. காரி-

லிருந்து ஏதோ விழுவது போன்ற சப்தம் கேட்டதும் இருவரும் காரை நிறுத்திவிட்டு காரின் பின்புறம் வந்தனர் உடன் கைத்துப்பாக்கி பலமுறை வெடித்தது. "ஐயோ!" என்ற பயங்கர சப்தத்தை கிளப்பியவாறே இருமுக மூடிகளும் கீழே விழுந்தனர். ஆம்! காரின் பின்னால் பதுங்கிருந்த மனித உருவம் அவர்களிருவரையும் சுட்டு வீழ்த்தியது. முகமூடிகள் பிணமாயினர். குண்டடிபட்ட இடத்திலிருந்த குருதி வழிந்து கொண்டிருந்தது. சுட்டுவீழ்த்திய உருவம் சுறுசுறப்பாக வேலை செய்தது இரு முகமூடிகளின் பிணங்களும் பள்ளத்தாக்கில் உருண்டன அம்மனித உருவம் வெற்றிபெற்ற வீரனைப்போன்று நின்று கொண்டிருந்தது. மாண்டுபோன இரு முகமூடிகளின் ஒருவனாக தன்னை அலங்காரம் செய்து கொண்டது அவ்வுருவம்; காரினுள் புகுந்து கொண்டது. கார் நகர ஆரம்பித்து, கடும் வேகத்துடன் பொதியமலைப் பாதையில் சென்றது. பழைய முகமூடியில் புதிய மனிதன் காரை செலுத்திக் கொண்டு சென்றான். நள்ளிரவிலே நடுமலைப் பாதையில் இவ்வாறு நடந்த சம்பவத்தை யார் அறிவார்?

மறுபடியும் கார் நகர மறுத்தது. அம்மனித உருவம் பழுது பார்க்க ஆரம்பித்தது. எவ்வளவோ அவசரமாக பழுதுபார்க்க முயன்றும் முடியவில்லையே! இருந்தாலும் அவ்வுருவம் தயங்காது பழுது பார்க்க முற்பட்டது

——(●)——

"நீ மாண்டு போ!"

பூகம்பம்! ஆம்! பயங்கர பூகம்பம்! பூமியை பயமுறுத்தியது! பார் முழுவதும் நடுங்க ஆரம்பித்தது. பூகம்பம், பொதியமலையை விட்டுவிடவில்லை! பொதியமலையும் பூகம்பத்தால் தாக்கப்பட்டது. வனமாளிகை இடிந்து விழுந்தது! வசந்த வனம் பாலைவனமாக மாறியது! 'பாலை வனத்தின் பழங்கால கட்டிடமொன்று இடிந்து விழுந்தாற்' போன்று வனமாளிகை இடிந்து நொறுங்கிவிட்டது!

கோகிலம்? அவள் கதி என்ன? இடிந்து நொறுங்கிய வனமாளிகையிலே அவளும் அழிந்து விட்டாளா? பாலைவனத்திலே திரிந்த "லைலா" போன்று அவள், பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட வசந்த வனத்தின் மத்தியிலே நின்று அழுது புலம்பிக் கொண்டிருந்தாள். பாலைவனமாக மாறிய வசந்தவனம் அவள் அழுகையை நிறுத்தவில்லை! அவள் அழுதுகொண்டேயிருந்தாள். பூகம்பம் அவளை பலிவாங்கவில்லை! எப்படியோ அவள் தப்பிவிட்டாள்! பூகம்பத்தில் உயிர் தப்பிய அவளைக் கொன்று, மென்றுவிட கடும்புலியொன்று வந்தது. அவள், புலியின் வரவைக்கண்டதும் கூக்குரலிட்டு அதிகமாக அழ ஆரம்பித்தாள். புலி அவள்மீது பாய எத்தனித்தது. அவள் ஒரு கற்சிலையை கட்டிப்பிடித்துக் கொண்டாள். அந்நிலையில் அவள் "பூகம்பத்திற்கு பலியாகியிருக்கக் கூடாதா?" என நினைத்தழுதாள். திடீரென்று பாய எத்தனித்த புலி, துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப்பட்டு, உயிர் துறந்தது. புலியைக் கொன்று, தன்னைச் சாவின் பிடியிலிருந்து மீட்டியது யாரென அவள் திகைத்தாள்! கற்சிலை சிரித்தது! அவள் திகைத்தாள்! கறசிலை பேச ஆரம்பித்தது! அவள் மேலும் திகைத்தாள்! கற்சிலையை உற்று நோக்கினாள்! சிலை நகர ஆரம்பித்தது! அவள் மேலும் திகைத்தாள்! கற்சிலை படீரென வெடித்தது! அவள் மேலும் திகைத்தாள்! சிலை வெடித்ததும் அதனுள்ளிருந்து அழகன் ஒருவன் தோன்றினான். "நான்தான் புலியைக் கொன்றேன்" என அவன் கூறியதும் அவள் அவனைக்கட்டியணைத்துக் கொண்டாள். அவன் யார்? முகிலன்! ஆம்! அவன்தான்! முகிலனை கட்டியணைத்தவாறே கடந்த வரலாற்றைக் கூறி, கோகிலம் கண்ணீர் சிந்தினாள். முகிலன், அவளை தேற்றினான்; கடந்தவைகளை மறக்கும்படி வேண்டிக் கொண்டான். அவள், அவனை அணைத்தபடியே ஆனந்தம் கொண்டாள். "அத்தான்! இனி என்னை விட்டுப்பிரிய மாட்டீர்களே!" என்று குழைந்தவாறே அவள் கேட்டாள். அவன் ஆமோதித்தபடியே அவளை அழைத்துக்கொண்டு சென்றான்.

இருவரும் சிங்காரச் சோலை யொன்றினுட் புகுந்தனர். அங்கே அழகுக் கலைவளம் பொங்கிக்கிடந்தது. இருவரும் மெய்மறந்தபடியே சிங்காரச் சோலை முழுவதும் சுற்றினர். இயற்கையின் எழில் கண்டு இருவரும் வியந்து விட்டார்கள் சிறுமரமும் அதில் படர்ந்த முல்லைக் கொடியும் அவர்கள் கண்களில் தென்பட்டன. "நான் முல்லைக் கொடி!" என அவள் கூறவே, அவன் "நான் சிறுமரம்!" எனக்கூறினுன். அவள், அவன்மீது தழுவிக்கொண்டாள். அவன், அவள் கூந்தலை தடவிக்கொடுத்தான். இருவரும் மேலும் நகர ஆரம்பித்தனர். அங்கே மலர்மீது வண்டு ஒன்று மதுவருந்திக் கொண்டிருந்தது. மலர் தன்னிடமுள்ள மதுவை, "வண்டு பருகுதே!" என வாட்டம் கொள்ளவில்லை! "நான் வண்டு" என்றுன் அவன். "நான் மலர்" என்றுள் அவள். அவனுக்கு உணர்ச்சி பொங்கியது! அதன் காரணமாக அவளை அணைத்து முத்தமிட்டான்! வண்டின் விருப்பத்திற்கு மறுப்புக் கூறுத மலராளுள் அவள் இருவரும் இதழமுதத்தை இன்பமுடன் பரிமாறிக்கொண்டனர். திடுக்கிட்டு இருவரும் திரும்பிப் பார்த்தனர். ஆண் புருவொன்று, பெண் புருவுடன் ஆனந்தம் பெறுவதைக் கண்டனர் இருவரும் இரு புருக்களாக இன்ப சுகத்தில் ஈடுபட்டனர் காதலரிருவர் இன்ப சுகத்தில் ஈடுபட்டிருப்பதைக்கண்ட புருக்கள் நாணமடைந்தன! மலர் வகைகளும் நாணமடைந்தன! மரம், செடி, கொடிகளும், நாணமடைந்தன! சிங்காரச் சோலையே நாணமடைந்தது! வேண்டுமளவுக்கு விரும்பிய சுகத்தை பூர்த்தி செய்துகொண்ட காதலரிருவரும், சிங்காரச் சோலை புற்றரையில் வீற்றிருந்தனர்

திடீரென கோகிலம், "ஐயோ!" என அபயக்குரலெழுப்பினுள்! காரணம்? சமரன் எதிரே வந்துகொண்டிருந்தான். சமரன் வரவு கண்டதும் காதலரிருவரும் திடுக்கிட்டனர். கோகிலம், முகிலனை கட்டிப்பிடித்துக்கொண்டாள். முகிலன் அஞ்சாத நெஞ்சுரத்துடன் கைத்துப்பாக்கியை யெடுத்துக்கொண்டான்; குறிவைத்தான்; குண்டுபாய்ந்தது! ஆனுல் சமரன்மீது பாயவில்லை! மீண்டும் குறிவைத்தான்! சமரன்மீது குண்டு பாய்ந்து குருதி-

கொட்டியது! "துப்பாக்கியால் என்னைக்கொன்ற கொலைகாரனே! நீ, மாண்டு போ!" என்று கூறியவண்ணம் கத்தியை வீசினான் சமரன். ஆனால் கத்தி முகிலன்மீது பாயவில்லை! சமரன் அதிருப்தி-யோடு சாவின் கையிலே சிக்கிவிட்டான். விடுதலை பெற வேண்-டும் என்ற நோக்கத்தோடு அவன், "கோகிலா! கோகிலா!!" என்று கூவினான். ஆனால் அவள், "என்னை ஏன் அழைக்கிறாய்? சாவின் கையிலே சிக்கிய சண்டாளா! நீ, மாண்டுபோ!!" என கோபம் பொங்க கத்தினாள்.

திடீரென்று அவள் கண் விழித்து விட்டாள்! "நீ, மாண்டு போ!" என்று அவள் வாய் தானாகவே உளறியது. கண்களை அகலத்திறந்து சுழட்டினாள்; "ஐயோ! எல்லாம் கனவு-தானா?" என பலமுறை தன்னையே கேட்டுக்கொண்டாள்; படுக்கையை விட்டெழுந்தாள்; பூகம்பக் காட்சி அவள் மனக்கண்-முன் பிரதிபலித்தது. வனமாளிகை "நீ கண்டது கனவு! நான் இடிந்து நொறுங்கவில்லை!" எனக் கூறுவதுபோல் காட்சியளித்-தது. அவள் கனவிலே எவ்வளவு சுகம் பெற்றதாக மகிழ்ந்தாள்! ஆனால் நனவிலே எவ்வளவு சோகம்! சோகத்தால் சோர்வடை-வோருக்கு கனவிலாவது கருதிய சுகம் கிடைக்கிறதே!

கோகிலம், தான் கண்ட கனவை நினைத்தவாறு, இருக்-கையில் அமர்ந்தாள். கழிந்த காலத்தை நினைத்தவாறும், கனவை நினைத்தவாறும் கண்ணீர் வடித்தாள். யாரோ வரும் சப்தம் கேட்டது! திடுக்கிட்டாள்! கனவில் கைலாயபுரிக்குச் சென்ற கயவன் சமரன், கையில் ஏதோ காகிதத்தோடு வந்தான். கனவிலே கண்ட பூகம்பம்! புலி! எல்லாம் அவளுக்கு தோன்றின! அவள் அச்சத்துடன் அழுத கண்ணீரையும் துடைக்காமல் நின்று-கொண்டிருந்தாள். சமரன் ஆணவத்துடன் அவளருகே வந்தான்; கையில் வைத்திருந்த காகிதத்தை அவளிடம் அலட்சியமாக வீசியெறிந்தான். அவள் அலட்சியமாகப் பார்த்தாள். "இந்தப் பத்திரிகையைப் படித்துப்பார்! பரவசமடைவாய்!!" என சமரன் சாந்த சீலனாகக்கூறினான்.

கோகிலம் அதை கையிலெடுத்தாள்; புரட்டி புரட்டிப் பார்த்தாள்; ஈட்டியால் தாக்குண்டவள் போல் "ஐயோ! முகிலன்! முகிலன்!!" எனக்கத்தினாள். பத்திரிகையில் வெளியான செய்தியைக்கண்டு, ஏன் அவள் அவ்வாறு கத்தவேண்டும்? இதோ பத்திரிகைச் செய்தி!

"இருண்ட காட்டருகே இளங்காளை யொருவர் இருதுண்டாக கொலை செய்யப்பட்டு கிடந்தார். அவர் யாரென்பது தெரியவில்லை. அவர் கையில் வைத்திருந்த புத்தகம் ஒன்றில் "முகிலன்" என்று எழுதப்பட்டிருப்பதை வைத்து இறந்தவரின் பெயர் முகிலன் தான் என கூறப்படுகிறது. பாதுகாப்பு இலாகாவினர் தீவிர புலன் விசாரித்து வருகின்றனர்" — இது அன்றைய பத்திரிகைச் செய்தி! வனமாளிகை இரகசிய அறையிலே அடைபட்டு அவதியுற்ற கோகிலாவின் முன் இப்பத்திரிகையை வீசியெறிந்தான் சமரன். பத்திரிகைச் செய்தியறிந்த கோகிலா "ஐயோ!" என அழ ஆரம்பித்தாள்; புரண்டாள்; புலம்பினாள். "உன் காதலன் மரணம்!" என பல திக்கிலுமிருந்து குரல்கள் எழுந்தன போன்றிருந்தது கோகிலாவுக்கு. அவள் மனக்கண் முன்னே 'முகிலன் கொலையுண்டிருப்பது' போன்ற காட்சி பயங்கரமாகக் காட்சியளித்தது. அவள் கனவுக் காட்சியும் இடையிடையே மின்னியது.

"முகிலன் இறந்து விட்டால் என்ன? இதோ முகிலனைவிட சிறந்த முகிலன்! என்னை உன் காதலனாகக் கொள், கட்டழகி!" இவ்வாறு சமரன் கூறினான். ஆ சமரனா? ஆம்! சகோதரனைக்கொலை செய்துவிட்டு, சிநேகிதனையும்கொலை செய்துவிட்டு, சகோதரன் மகளையும் காதலிக்கத் துடித்தது அந்த சண்டாளன் சமரன்தான்! பலநாள் இவ்வாறு கோகிலாவை துன்புறுத்தினான். இது கடைசிநாள். அன்று செய்திப் பத்திரிகையைக் காட்டி அவள் காதலை வேண்டினான். 'காதலன் இறந்து விட்-

டானே' என்று அவள் புதிய காதலை விரும்பவில்லை; சமரன் வேண்டுகோளுக்கு இரங்கவுமில்லை! கனவுக் காட்சியை மறக்காது கடுந்துயரம் கொண்டாள்.

"செல்வப்பட்டி சென்ற நமது காரும் வரவில்லை! முகமூடி-களையும் காணேம்." என சமரன் கையாள் கூறினன். "போய் வந்து பார்த்துக்கொள்கிறேன்" என்று கூறியபடியே வெளியே விரைந்தான் சமரன். வனமாளிகைக்கு வாய் இருந்திருக்குமானல் "சகோதரன் மகளை பெண்டாளத் துணியும் சண்டாளா! நீ மாண்டு போ!" எனக் கூறியிருக்கும்!

———(●)———

கண்ணீர்! கண்ணீர்!!

கார்முகிற் கூட்டம் குவிந்தது. இடியோசை யெழுந்தது. மின்னல் மின்னியது. பெருங்காற்றும், பெருமழையும் ஏற்பட்டன. இவைகளைப் பொருட்படுத்தாது புதிய முகமூடி மனிதன் காரை ஓட்டிவந்தான். வனமாளிகை வாயிலில் வந்து கார் நின்றது. முக-மூடி மனிதன் காரைவிட்டிறங்கினன் திடீரென்று அடுத்த கார் வரும் சப்தம் கேட்டு அவன் திரும்பிப் பார்த்தான் கார் ஒன்று வந்து அவன் நிறுத்திய கார் அருகில் நின்றது. அதனுள்ளிருந்து சமரன் வெளியே வந்தான். முகமூடி திடுக்கிட்டான். அவன் பழைய முகமூடியில் வந்த புதியவன் அல்லவா? எனவே தான் திடுக்கிட்டான். இருந்தாலும் சமரன் அறியாதவாறு அவன் திகிலை அடக்கிவிட்டான்.

"நான் ஒருபாதை வழியாக உன்னைத் தேடிப் போனேன். நீ ஒரு பாதை வழியாக வனமாளிகைக்கு வந்து விட்டாய். சரி! வா, மாடிக்கு போவோம்" இவ்வாறு சமரன் கூறவும், புதிய மனிதன் அவனைப் பின் தொடர்ந்தான். இருவரும் மாடிக்குச்-சென்று ஒரு தனியறையில் அமர்ந்தனர். 'கோகிலாவை சம்ம-திக்கவை!" என சமரன் உத்தரவு ஒன்றைப் போட்டான். திகைப்பைக் காட்டாது அம்மனிதன் அறையை விட்டு வெளியே

வந்து கோகிலம் இருக்கும் அறையைத் தேடினான். அவன் தேடியதை நல்ல வேளையாக சமரன் பார்க்கவில்லை. பார்த்திருந்தால் புதியவன் மீது சந்தேகம் ஏற்பட்டிருக்கும். எப்படியோ கோகிலம் இருந்த அறையைப் பார்த்துவிட்டான். திகைத்தவாறே அவ்வறையினுள் அடியெடுத்து வைத்தான். அறை முழுவதும் இருட்டாக இருந்தது. தடவிப்பார்த்து மின்சார விளக்கின் பொத்தானை அழுத்தினான்; திடீரென்று அதிர்ச்சியடைந்தான், மின்சாரம் அவனைத் தாக்கவில்லை; அவன் கண்ட காட்சி அவனை அவ்வாறு அதிர்ச்சியடையச் செய்துவிட்டது அக்காட்சி யாது?

பிணமாக ஓர் உருவம் தொங்கிக் கொண்டிருந்தது. அவ்வுருவம் பெண்ணழகி! ஆம்! கயிற்றிலே காரிகை தொங்கிக்கொண்டிருந்தாள்! அவள் வேறு யாருமல்ல. கோகிலம்தான்! கோகிலாவா? ஆம்! முகிலன் மாண்டதாகச் சொல்லப்பட்டச் செய்தி அவளை அக்கதிக்குக் கொண்டுபோய்விட்டது. அதிர்ச்சியடைந்த அம்மனிதன் அப்பிணமருகே சென்றான். அவன் இதயம் துடித்தது; கைகால்கள் நடுங்கின; கண்கள் அகலத்திறந்தன; அவள் முகத்தை நோக்கியதும் "கோகிலா! கோகிலா!! நீயா பிணமானாய்?" எனக் கத்தினான்; அலறினான்; அழுதான். பிணத்தைக் கீழிறக்கி, அவள் முகத்தை தன் மடியில் கிடத்தியவாறே அவன், அழுகுரலை யெழுப்பினான். கோகிலா சம்மதிக்கும்படி செயலாற்றச் சென்ற புதியவன், ஏன் இவ்வாறு அழுதான்? அழுகுரல் கேட்டு சமரன் கோகிலாவின் அறையினுட் சென்றான். முகமூடியை அகற்றிவிட்டு அம்மனிதன் கோகிலாவைப் பார்த்து கண்ணீர் வடிப்பதைக் கண்டான்; உடனே சமரன் கைத்துப்பாக்கி வெடித்தது: அம்மனிதன் அழுதுகொண்டே பிணமானான். "முகிலன் முகமூடி மனிதன்! மாண்டுவிட்டான் என்றது பொய்!" இவ்வாறு சமரன் முணுமுணுத்துக் கொண்டான். ஆம்! பழைய முகமூடியில் புதிய மனிதனாக வந்தது முகிலன்தான் பத்திரிகையில் கூறப்பட்ட முகிலன் வேறு! பத்திரிகைச் செய்தியை யறிந்ததும் முகிலனையறிந்தவர்கள் இதையறியவில்லை.

கோகிலமும் அறியாதவாறு அவசரமுடிவுக்கு வந்ததினால்தான் பிணமானாள்.

நாட்டுவிடுதலைப்படை நாட்டை அன்னியரிடமிருந்துமீட்டு விட்டது. வெற்றிவீரனாக முகிலன் ஓடோடி வந்தான்; காதலியைத் தேடிவரப் புறப்பட்டான்; இரவு பகலும் பல இடங்களிலும் அலைந்தான்; பொதிய மலையிலே சமரனின் முகமூடி மனிதர்களை ஏமாற்றினான். அதன் பிறகு நடைபெற்றவைகளை நீங்களறிந்துவிட்டீர்களே!

இவ்விதம் வன மா ளி கை இரகசிய அறையிலே இரு பிணங்கள்! சமரன், இருபிணங்களையும் இரகசியமாகப் புதைத்து விட்டான். புதைக்கப்பட்ட இடத்தை நோக்கி வனமாளிகையும் வசந்த வனமும் கண்ணீர் விட்டன. வசந்த வன மலர்கள் கண்ணீர் சிந்தின! அதைப்பார்த்து, வான்மதி கண்ணீர் சிந்த, அதைப்பார்த்து, விண்மீன்கள் கண்ணீர் சிந்த, அவைகளைப் பார்த்து, ஆழ்கடல் கண்ணீர் சிந்தியது. கண்ணீர்! கண்ணீர்!! எங்கும் கண்ணீர்!!!

——(●)——

தப்பிவிட்டான்?

சமரன், "பதவிப்புரியிலே பாவையோடு பரமானந்தமாகப் பவனி வரலாம்" என்று நினைத்ததெல்லாம் வீண் கனவாகியது. வனமாளிகையின் தனியறையிலே சமரன் வருந்திக்கொண்டிருந்தான். "வனமாளிகையின் வரலாற்றை யாரும் அறிந்து விடக்கூடாதே" என்பதே அவன் கவலை. 'பள்ளத்தாக்கிலே பரிதாபமரணமடைந்த சதானந்தம், அகிலன், சுகிலம், வனமாளிகையிலே பிணமான கோகிலம், முகிலன், ஆகியவர்களின் பிணங்கள் எழுந்து வந்து, பழிவாங்கி விடுமோ' என்ற கவலை! "என்ன செய்வது? எப்படிச் செய்வது?" இவ்வாறு யோசித்துக் கொண்டிருந்தான் சமரன்; தனிமையில் இனிமைகாண முடியாதவனாக

அறையிலே அடைபட்டுக்கிடந்தான். அறைக் கதவை, யாரோ தட்டும் சப்தம் கேட்டது. சமரன் திடுக்கிட்டான்; கதவைத்தட்டியது யாரென அறியும் பொருட்டு எழுந்திருந்து கதவுப்பக்கம் சென்றான்; தாழ்ப்பாளைத் திறந்தான். "ஆச்சரியம்" அவனை அரவணைத்துக்கொண்டது! கதவைத் தட்டியவன் நின்றுகொண்டிருந்தான். பெருமூச்சை அடக்க முடியாமல் அவன் அவதிப்பட்டுக் கொண்டிருந்தான். அவன் முகத்தில் துக்கக் குறி தென்பட்டது. அவன் கை, கால்கள் நடுங்கிக் கொண்டிருந்தன. சமரன் அவனைப் பார்த்தபடியே திகைத்து நின்றுவிட்டான்.

"நாட்டின் ஆட்சிப் பொருப்பேற்றிருக்கும் புதிய ஆட்சியாளர்கள், ஜமீந்தார்களை சாதாரண உழைப்பாளர்களாக மாறறப்போகிறார்களாம். அதன் காரணமாக ஜமீந்தார்கள் எல்லோரும் பதவியிழந்து விட்டனர்; பலர், அவரவர்களுடைய பஞ்சமாபாதகச் செயல்களின் காரணமாகக் கைது செய்டப்பட்டிருக்கிறார்கள். நீங்களும் கைது செய்யப்பட வேண்டியவர்களாம். எனவே பாதுகாப்புப்படை உங்களைக் கைது செய்திட வருகிறது. உடனே இங்கிருந்து தப்பியோடிவிட வேண்டும். இல்லையேல் தொல்லை!" – இவ்வாறு கதவைத் தட்டியவன் நடுங்கிக்கொண்டே கூறினான். சமரன் திகைத்தான்; திகில் கொண்டான். 'வனமாளிகைச் சம்பவங்களை உலகம் அறியக்கூடாது' என்பது அவன் தீர்மானம்! வனமாளிகையிலே அவன் செய்த அநீதிகள் யாருக்குத் தெரியும்? செல்வப்பட்டி – அமுதபுரி ஆகிய இரு இடங்களிலும், அவன் ஆடிய அநீதியாட்டங்களை அறியாதவர்கள் 'இல்லை' என்றே இயம்பலாம் வரப்போகும் ஆபத்திலிருந்து தப்பித்துக் கொள்ள, சமரன் தீவிரமாக யோசித்தான்.

இத்தருணத்தில் பாதுகாப்புப்படை, வனமாளிகையைச்சுற்றி வளைத்துக்கொண்டது. துப்பாக்கி வீரர்கள் வானத்தை நோக்கிச்சுட்டனர். 'சமரன் வெடியோசைகேட்டு அடிபணிந்திட வெளியே வருவான்' என நினைத்தே சுட்டனர்; பல முறை சுட்டனர் ஆனால் மாளிகையிலிருந்து யாரும் வரவில்லை. பாதுகாப்புப்படை வாயிற் கதவின் பூட்டை உடைத்து வனமாளிகை

யினுட் புகுந்தனர்; கதவுகளைத் திறந்துகொண்டு ஒவ்வொரு அறையினுள்ளும் புகுந்தனர்; ஒவ்வொரு பகுதியையும் சோதித்தனர்; வனமாளிகை முழுவதும் தேடிவிட்டனர். ஆனால்? சமரன் அகப்படவில்லை! "தப்பிவிட்டான்!" என படையினர் வாய்கள் வியப்புடன் திறந்தன. சமரன் தப்பிவிட்டானா? ஆம்! தப்பிவிட்டான் சமரன்! எனவே பாதுகாப்புப்படையில் ஒரு பகுதி வனமாளிகையைச் சுற்றி காவல்புரிய ஆரம்பித்தது. சமரனைத் தேடிப் பிடிக்க மற்றப் பகுதி விரைந்தது.

சமரன் எப்படி தப்பிவிட்டான்! திகைப்பாலும், திகிலாலும் திணறிக்கொண்டிருந்த சமரன் காதுகளில், துப்பாக்கிக்குண்டுகளின் சப்தம் கேட்டதும், அவன் மாளிகையின் மாடியைவிட்டே கீழே ஓடினான்; மற்றொரு பகுதிக்குச்சென்றான் அவன் தோழர்களும் அவனைப்பின் தொடர்ந்தனர். எல்லோருமாகச் சேர்ந்து இரகசியசுரங்க அறை வாயிற்கதவைத்திறந்தனர்; கதவு திறந்தது! எல்லோரும் சுரங்கத்தினுட் புகுந்துவிட்டனர்! கதவு பழையபடி மூடிக்கொண்டது! சமரன் தன் தோழர்களுடன் சுரங்கத்தின் மூலம் தப்பிவிட்டான். அவன் சென்றதும் பாதுகாப்புபடை, மாளிகையைப் பரிசோதித்தது. சுரங்க வழிக் கதவினருகில் அவர்களும் வந்தனர். வந்து என்ன பயன்! மூடப்பட்டிருந்த சுரங்க வழிக்கதவு, அவர்களுக்கு, கற்சுவராகத் தான் காட்சியளித்ததேயொழிய, கதவாகக் காட்சி தரவில்லை! எனவே பாதுகாப்புப் படையினர் ஏமாந்தனர். சமரன் தப்பிவிட்டான்!

——(O)——

கலகக்காரர்கள்.

மாதங்கள் பல மறைந்தன!

விடுதலையடைந்த நாட்டிலே நன்மைகள் பலவற்றைச்செயலாற்ற புதிய ஆட்சியாளர்கள், பற்பல புதிய முறைகளைக் கையாண்டனர். மக்களும் அவைகளை வரவேற்றனர். நீதி தலை நிமிர்ந்தது. பஞ்சம் பறந்தோடியது. மக்களுடைய குறைகளைத்

தீர்த்து, தேவைகளைப் பூர்த்தி செய்தனர் புதிய ஆட்சியாளர்கள். மக்களாட்சியின் மறுமலர்ச்சியாகவிருந்தது அவர்கள் ஆட்சி.

இத்தருணத்தில் விடுதலையடைந்த நாட்டின்மீது கலகக்காரர்களை, கலகம் செய்யும்படி ஏவிவிட்டனர் அண்டை நாட்டினர், "தன்னிடம் சந்தையாகவிருந்த, அடிமை நாடு விடுதலை பெற்றுவிட்டதே!" என்ற அவர்களுடைய ஏக்கம்தான், கலகக்காரர்களை, விடுதலையடைந்த நாட்டினுள் புகும்படி செய்தது.

கலகக்காரர்கள், பஞ்சமா பாதகங்களை விடுதலைபெற்ற நாட்டில் விதைத்துவந்தனர். துரோகிகள் பலர், கலகக்காரர்களுக்கு உதவிசெய்து வந்தனர். "ஒரே நாடு!" எனக்கூறி, நாட்டின் விடுதலைக்கு முட்டுக்கட்டையிட்ட முட்டாள்கள், "அகில உலகக் கண்ணோட்டம்!" என பரந்த மனப்பான்மையோடு பேசி, பஞ்சமா பாதகங்களை புரட்சியின் பேரால் செய்துவந்த சண்டாளர்கள், கலகக்காரர்களின் கைப்பாவைகளாக இருந்து, கயமைச் செயல்களைப் புரிந்து வந்தனர். இந்நிலையில் புதிய ஆட்சியாளர்கள் அடைந்த அல்லல் அநேகம்! புதிய ஆட்சியாளர்கள் புத்திக் கூர்மையுடன் நடந்துகொண்டனர். நாட்டின் விடுதலைக்குப் பாடுபட்ட பகுத்தறிவுக் கட்சி, கலகக்காரர்களையொழிப்பதில், அரசினரின் பாதுகாப்புப் படையோடு பலமாகப் பணியாற்றியது.

கலகக்காரர்கள் பலவிதமான ஆடைகளை அணிந்தவாறு அநீதிகள் பல புரிந்து வந்தனர்; பலவர்ணங்களிலே பவனி வந்தனர். பகுத்தறிவுக் கட்சிக்காரர்கள் பச்சோந்தியாக பவனி வரவில்லை; பாசறை வீரர்களாக பவனிவந்தனர். பகுத்தறிவுக்கட்சியை தொலைக்க கலகக்காரர்கள் முயன்றனர். பற்பல இடங்களில் பகுத்தறிவுக்கட்சிக்காரர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இருந்தபோதிலும் பகுத்தறிவுப்படை சோர்வடையவில்லை. வீரர்களும், வீராங்கனைகளும் பகுத்தறிவுப்படையில் சேர்ந்து, சேவைசாதித்தனர்.

———(●)———

புலி வாயில் பசு.

மலைச் சோலைப்பாதை! மக்கள் நடமாட்டமில்லாத பாதை அது! பயங்கர வாதிகள் பவனிவரும் பாதை அது! அந்தப் பாதை ஆபத்தை அளிக்கும்! அந்தப் பாதையருகே ஒருவன், வீரநடை போட்டபடியே, அங்குமிங்கும் உலாவிக்கொண்டிருந்தான். யாரையோ பழிவாங்க, அவன் அவ்வாறு உலாவிக்கொண்டிருந்தான். பகுத்தறிவுப் படைவீரர்கள் அணியும் ஆடைகளையே அவனும் அணிந்திருந்தான். அவன் உலாவிக்கொண்டே யிருந்தான்.

கொள்ளைக்காரர்கள் அணியும் ஆடைகளை அணிந்தவாறே ஒருவன் சோலைக்குள் புகுந்தான்; பதுங்கிப் பதுங்கிச் சோலை முழுவதும் சுற்றினன்; அந்தப் பாதையருகே வந்தான்; அவன் உள்ளம் துடிதுடித்தது; நடமாடும் மனிதனை நோக்கினன்; 'வேங்கையை வீழ்த்தப்போன வேடன்' போன்று வீரமுடன் நின்ருன்; கைத்துப்பாக்கியை எடுத்தான்; நன்ருக குறிவைத்தான், துப்பாக்கிக் குண்டு வெடித்தது! "ஐயோ! அம்மா!!" என்று அலறும் குரல் எழுந்தது. பாதையில் நடமாடிய மனிதன் அலறவில்லை! பாதையில் நடமாடிய மனிதனை நோக்கி குறிவைத்த மனிதன் குண்டடிபட்டு வீழ்ந்திறந்தான்! அவன் தற்கொலை செய்துகொள்ளவில்லை! பாதையில் நடமாடியவனும் அவனைச் சுடவில்லை! பாதையில் நடமாடியவன் படீரென வெடிச்சப்தம் கேட்டதும் திடுக்கிட்டான்; சோலையினுள் புகுந்தான்; பதுங்கிக்கொண்டான்; தன் மீதும் குண்டு பாய்ந்துவிடக் கூடாதே என பதுங்கிக் கொண்டான். அவன் அணிந்திருந்த பகுத்தறிவுவாதிகள் அணியும் ஆடையை அடிக்கடி பார்த்துக்கொண்டான். "துப்பாக்கியால் சுட்டவன் யார்? சுடப்பட்டு. சொர்க்கம் சென்றவன் யார்?" — இவ்வாறு அவன் உள்ளம் அடிக்கடி துடித்தது. யாரோ பின் வரும் சப்தம்கேட்டது! அவன் அதைரியப்படாமல் திரும்பிப்பார்த்தான்! பகுத்தறிவுவாதிகள் அணியும் ஆடையை அணிந்துள்ள ஒருவன் வந்தான்! பதுங்கியவன் எழுந்திருந்தான். "நான் தான், அக்

கொள்ளைக்காரனைக் கொன்றேன்! பதுங்கியபடியே வந்த அவனைப்பின் தொடர்ந்தேன் அவன் உங்களைச் சுட்டு வீழ்த்த குறிவைத்ததைக் கண்டதும், நான் அவனைச் சுட்டு வீழ்த்தினேன்! பகுத்தறிவுப்படை வீரராகிய தாங்கள் இந்த பகுத்தறிவுப்படை வீராங்கனையால் தப்பிவிட்டீர்கள்!" — இவ்வாறு வந்த உருவம் கூறிக்கொண்டே ஆண் வேடத்திலிருந்து பெண்ணுருவம் பெற்றது. "பகுத்தறிவுப்படை வீரனா?" என அவன் தனக்குள் கூறிக்கொண்டான். வீரன் உருவில் வந்த வீராங்கனையோடு அவன், இறந்து கிடந்த மனிதன் அருகில் சென்றான். இறந்த மனிதனை இருவரும் உற்று நோக்கினர். அவன் ஆனந்தம் கொண்டான்! அவள் ஆச்சரியமும் திகிலும் கொண்டாள்! "ஆ! குயிலனா? குயிலன்! நீங்களா கொள்ளைக்காரன் வடிவில் வந்தீர்கள்? நீங்கள் பகுத்தறிவுப்படை வீரராயிற்றே!" — இவ்வாறு அவள் கண்ணீர் விட்டழுதாள்! "பகுத்தறிவுப்படை வீரராகிய தாங்கள் ஏன் பகுத்தறிவுப்படை வீரரைக் கொல்லத் துணிய வேண்டும்? ஒரு வேளை நீங்களும் பாழும் கொள்ளைக் கூட்டத்தோடு சேர்ந்து விட்டீர்களோ?" என அவள் புலம்பினாள்! அருகே நின்றவன் சிரித்தான்!! பலமுறை விலா நோகச் சிரித்தான்!! அவள் திகைத்தாள்! அளவிட முடியாதபடி திகைத்தாள்!! "பகுத்தறிவுப்படை வீரன் பரிகாசத்தோடு பலமாக ஏன் சிரிக்க வேண்டும்?" என அவள் எண்ணினாள்.

அவன் மீண்டும் மீண்டும் சிரித்தான்! அவள் அஞ்சி நடுங்கினாள்! "ஏன் சிரிக்கிறீர்?" என்று அவள் கேட்கத்துணியவில்லை. "நங்கையே! நான் ஏன் சிரிக்கிறேன்? தெரியுமா உனக்கு? பசுத்தோல் போர்த்திய புலியைக்கொல்ல, புலித்தோல் போர்த்தியபடி வந்த காளையை, புலியை 'பசு' என நினைத்த — காளைத்தோல் போர்த்திய பசு கொன்றதுமல்லாமல் புலியின் கையிலும் சிக்கிவிட்டது!' என அவன் கூறினான். அவள் மேலும் திகைத்தாள்; "விளங்கவில்லையே!" என்றாள்.

"நங்கையே! இறந்து கிடப்பவன் புலித்தோல் போர்த்திய காளை! நான் பசுத்தோல் போர்த்திய புலி! நீ காளைத்தோல்

போர்த்திய பசு!" என அவன் விடையளித்துக்கொண்டே வெற்றிச் சிரிப்பு சிரித்தான்.

"பகுத்தறிவுப் படைவீரன் உருவில் வந்த கொள்ளைக்காரனு நீ?" என அவள் கோபத்தோடு கேட்டாள். "ஆம்! சாதாரண கொள்ளைக்காரன் அல்ல! கொள்ளைக் கூட்டத்தின் தலைவன்! இவன் எப்படியோ என் வேஷத்தை அறிந்துகொண்டு கொல்லத் துணிந்திருக்கிறன். நல்ல வேளை! புலி, பசுவால் காப்பாற்றப்பட்டது!" என்று அவன் கூறியதும் அவள் ஓட எத்தனித்தாள். 'புலி வாயில் அகப்பட்ட பசு' தப்புவது அவ்வளவு எளிதா? அவளைத் தாவிப் பிடித்துக்கொண்டான் அவன். அவள் "ஐயகோ!" என்று அபயமிட்டாள் அவன் அவளை அபகரித்துக்கொண்டு மறைந்து விட்டான். அவன் அவ்வாறு சென்ற காட்சி "புலி வாயில் பசு" சிக்கிய காட்சியைப்போலிருந்தது.

———(●)———

அடாத பழி.

கொள்ளைக் கூட்டத்தின் தலைவன், பகுத்தறிவுப் படை வீராங்கனையோடு எங்கோ மறைந்து விட்டான். அவன் மறைந்ததும் அடுத்து ஒரு சிறு கொள்ளைக் கூட்டத்தினர் வடிவில் பகுத்தறிவுப் படைவீரர்கள் பதுங்கிப் பதுங்கி வந்தனர். மலைச்சோலை முழுவதும் எதையோ தேடினர்.

"கொள்ளைக்காரர்கள் வேடம் தாங்கி, கொள்ளைக்காரர்களைப் பிடிக்க வந்தோம். நம்முடன் வந்து திடீரென்று மறைந்து சென்ற குயிலனைக் காணவில்லையே!" என எல்லோரும் சலிப்புடன் கூறிக்கொண்டே தேடினர்: குருதியில் கிடந்தவாறு கொலையுண்டு கிடந்த குயிலனைக்கண்டனர். "குயிலன்! குயிலன்!!" என்ற குரல்கள் ஏக காலத்தில் எழுந்தன. "பகுத்தறிவுப் படைவீரனே! எவ்விதம் இக்கதிக்கு ஆளானுய்?" என ஒவ்வொருவரும் கூவினர்.

குயிலனைச் சுற்றி கொள்ளைக்காரர்கள் வடிவில் பகுத்தறிவுப்படை வீரர்கள்! இக்காட்சியை ஒரு கூட்டத்தினர் கவனித்தனர். அக்கூட்டத்தினர் வழிப்போக்கர்கள் வடிவில் பதுங்கிய படியேயிருந்தனர்; சதியாலோசனை செய்தனர்; 'உலகக்கண்ணோட்டம்' என்ற முறையில் ஏதோ திட்டம் தீட்டினர்; மௌனமாக நகர ஆரம்பித்தனர்.

"பிடியுங்கள் கொள்ளைக்காரர்களை!" — இவ்வாறு கத்தினர் வழிப்போக்கர்கள் வடிவில் வந்த கொள்ளைக்கார ஆதரவாளர்கள். "நாங்கள் கொள்ளைக்காரர்கள் அல்ல! கொள்ளைக்காரர்களைப் பிடிக்க வந்த கொள்ளைக்கார வேடம் தாங்கிய பகுத்தறிவுப் படைவீரர்கள்" என குயிலன் அருகிலிருந்தோர் கூறினர். கொள்ளைக்கார ஆதரவாளர்கள் விடவில்லை! குயிலன் பிணம் எடுத்துச் செல்லப்பட்டது! அதோடு பகுத்தறிவுப் படைவீரர்களும் கைதிகளைப்போல் அழைத்துச் செல்லப்பட்டனர்.

கொள்ளைக்கார ஆதரவாளர்கள், கொள்ளைக்கார வடிவில் காட்சியளித்த பகுத்தறிவுப்படைவீரர்களை, பாதுகாப்பு இலாகாவிடம் ஒப்படைத்தனர்; பலவிதமான குற்றங்களைச் சாட்டினர்; "பகுத்தறிவுப்படை வீரர்கள்தான் கொள்ளைக்காரர்கள்! அவர்கள் அரசியலாருக்கு ஆதரவு அளித்தவர்கள் போல் வெளிவேடம் தாங்கி வந்தவர்கள்" என்ற அடாதபழியை விடாது சுமத்தினர்; அதை நிரூபிக்க கொள்ளையர்கள் வேடம் தாங்கிய பகுத்தறிவுப்படை வீரர்களை உதாரணம் காட்டினர்.

நீதிமன்றத்திலே நீதிக்காக போராடிய பகுத்தறிவுப்படை வீரர்கள் நிறுத்தப்பட்டார்கள். குயிலன் மரணம்பற்றிய விசாரணையும் நடைபெற்றது. ஆனால் மரணத்திற்குக் காரணம் வெளிவரவேயில்லை! கொள்ளைக்கார ஆதரவாளர்கள், பகுத்தறிவுப்படை வீரர்கள் மீது பழியை வீசினார்கள். "பகுத்தறிவுப் படைவீரர்கள்தான் கொள்ளையர்கள்" என்ற அடாத பழியைக் கேட்டு நீதி கண்ணீர் விட்டது! வேண்டாதவர்கள் மீது வீண் பழி சுமத்துவது "அகில உலகக் கண்ணோட்டம்" போலும்!

கொள்ளைக்கார ஆதரவாளர்களுக்கும், கொள்ளைக்காரர்களுக்கும் நீதியேது? நேர்மையேது?

———(●)———

இன்பக் கொள்ளை.

பெரும்பாராங்கற்கள் நிறைந்தஇடம் அது! சிறுபாறைகள், பெரும்பாறைகள், கூழாங்கற்கள் முதலியவைகள் அங்கே குவியல் குவியலாகக் காட்சியளித்தன பாறைப் பிரதேசத்தில் பிறர் பார்த்துவிடக் கூடாதபடி ஒரு குகை அந்த இடத்திலே அவ்வளவு அமைப்பாக அமைந்திருந்தது. குகையின் தோற்றம் பயங்கர-மானது. பயந்தவர்கள் அதனருகே செல்வரோ? பயங்கரவாதி-கள் பதுங்குமிடம் அது! அந்தக் குகை அன்று "ஆனந்த அறை"-யாகக் காட்சி தந்ததைக் கம்பன் போன்றோர் கவனித்திருப்பார்-களேயானால், அந்தக் குகையைப்பற்றி காவியமே தீட்டியிருப்பர்! அந்தக் காவியம் ஆண்டவனைப்பற்றிய வர்ணனையாக இருக்காது! "ஆனந்த லீலை" யைப்பற்றிய விளக்கமாகவே இருந்திருக்கும்! குகையிலே நிகழ்ந்த ஆனந்த லீலையைப்பற்றி வேறென்ன எழுது-வர்? கடவுள் காவியத்திலேயே காம லீலையைப்பற்றி கம்பன் போன்றோர் எழுதியுள்ளனர். குகையிலே நிகழ்ந்த காம லீலையைப்-பற்றி அவர்கள் எழுதியிருப்பார்களானால் அஃது கொக்கோகத்-தின் மறு பதிப்பாகவே இருந்திருக்குமென்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை!

குகையிலே அவ்வாறு என்னதான் நிகழ்ந்தது? காதல-ரிருவர் கருத்து ஒருமித்து இன்பம் துய்த்துக் கொண்டிருந்தனர். "இச்.........இச்!" என இதழமுதம் பருகியபடியே இருவரும் இவ்வுலகை மறந்து இன்ப சுகத்தில் இறுமாந்து கிடந்தனர்.

காதல் லீலை புரிந்தவர்கள் யார்? காதலன் கொள்ளைக்-கூட்டத்தின் தலைவன்! காதலி, அவனால் அபகரித்துக் கொண்டு-வரப்பட்ட பகுத்தறிவுப்படை வீராங்கனை! ஆம்!

ஆரம்பத்தில் அவள், அத்தலைவனின் ஆனந்த அறைப்பாவையாக மாற மறுத்தாள் ஆனல் அத்தலைவன் தன் கொள்ளைக்கார வேஷத்தைக் களைத்ததும் அவள், அவன் மீது அளவுகடந்த அன்பு கொள்ளலானாள்; அல்ல. அவ்வாறு நடிக்கலானாள். 'நடிப்பின் பேரால் எத்தனையோ நங்கையர் அவர்கள் தம் அருங்கற்பை யிழந்ததுபோல்' அவளும் தன் கற்பையிழந்து அவனுடன் கூடிக்கலந்தாள். அவன், அவளைப் பூரணமாக நம்பிவிட்டான். ஆனல் அவள், தன்னைப் பலியிடுவதின் மூலம் பழிவாங்கவே அவ்விதம் அவனுடன் இரண்டறக் கலந்தாள். எனவே தான் பொதியமலைக்குகையிலே இருவரும் இன்பத்தைக் கொள்ளையடித்தனர். "பிறர் பொருளைக் கொள்ளையடிப்பதில் மட்டும் அவன் சிறந்தவனல்ல! இன்பக் கொள்ளையடிப்பதிலும் அவன் சிறந்தவன்" என்று கருதும் அளவிற்கு அவன் நிலை அப்படியிருந்தது "இருவரின் இன்ப லீலையைக் காண்பதற்கு கம்பன் இல்லையே!" என வருந்தியது அக்குகை! ஏன்? "மங்கையரின் மார்பகங்களையும் மறைவிடங்களையும் பற்றி வர்ணித்த கம்பன், குகையில் நிகழ்ந்த லீலைகளைக் கண்டிருந்தால் காவியம் தீட்டியிருப்பாரே!" எனக்குகை வருந்தியிருக்கலாம்.

——(●)——

"ஐயோ! மனோன்மணி!!"

நடுநிசி! நல்லவர், பொல்லாதவர் என்ற பாகுபாடில்லாது எல்லோரையும் நித்திராதேவி அரவணைத்துக் கொண்டிருந்தாள். கொள்ளைக்காரர்கள், கொள்ளைக்கார ஆதரவாளர்கள் முதலியவர்கள் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தனர்; அவர்களுடைய இரகசிய இருப்பிடத்திலே தூங்கிக்கொண்டிருந்தனர். கொள்ளைக்காரத் தலைவனும் தூங்கிக்கொண்டிருந்தான். இரவுக் காவலாளிகள் கூட இனிதாகத் தூங்கிக்கொண்டிருந்தனர். ஆனல் அத்தலைவனின் காதலி? அந்த பகுத்தறிவுப்படை வீராங்கனை? அவள் தூங்கவில்லை! அங்குமிங்கும் புரண்டபடியே அவள் கட்டிலில் காட்சியளித்தாள்; மெல்ல எழுந்திருந்தாள்; சுற்றும் முற்றும் நோக்கினாள்; "நச்சுப் புகைக் குண்டுகளினால் அவர்கள் நாச

மடையட்டும்" என அவள் காதலன் — கொள்ளையர் தலைவன் தூக்கத்தில் புலம்புவதையும் கேட்டாள்; துணிவோடு துணைவனை-விட்டு நடக்க ஆரம்பித்தாள். மெழுகுவர்த்தி யொன்று எரிந்து கொண்டிருந்தது. அதன் வெளிச்சத்தருகே அவள் உட்கார்ந்தாள்; சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டாள்; காகிதம் ஒன்றை எடுத்து அதில் அவசரமாக ஏதேதோ எழுதினுள்; எழுதிய காகிதத்தை சிறந்த கவசம் ஒன்றினுட் வைத்து கவசத்தின் மேல் "இதனுள்-ளிருக்கும் கடிதம் காண்க!" என கொட்டை எழுத்துக்களில் எழுதினுள்; பின்பு அவ்விடத்தை விட்டு மெதுவாக நகர்ந்து, நகர்ந்து பிறிதோரிடத்திற்கு வந்தாள்; கையிலேயுள்ள மெழுகு-வர்த்தியை அடிக்கடி பார்த்தவாறே மூடியெடுத்து வைத்தாள்; சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டாள்; தூங்குபவர்களெல்-லோரையும் ஒரு தடவை பார்த்துக்கொண்டாள்; எதையெல்-லாமோ ஒரு கணம் யோசித்தாள்; அவள் சப்தமின்றி ஏதோ புலம்பினுள். திடீரென அவள் முகம் மாறியது! அவள் கண்கள் அகலத்திறந்தன! அவள் மெழுகுவர்த்தியை ஓரிடத்தில் வைத்-தாள். உடன் தீ பரவ ஆரம்பித்தது. அவள், அவளுடைய துணை-வன் இருக்கும் அறைக்கு ஓடினுள். படீரென வெடிச் சப்தம் பலதடவைக் கேட்டது! அவள், தூங்கிக்கொண்டிருந்த தலைவனை அணைத்தபடியே அவனுடன் படுத்துக்கொண்டாள். அவன் திடீ-ரென கண் விழித்துவிட்டான்; அருகே அவனை அணைத்தபடியே-யிருந்த அவளையும் பார்த்தான். அவள் கண்களை மூடிக்கொண்-டாள். "ஐயோ! நச்சுப் புகைக் குண்டுகள் வெடித்து விட்ட-னவே!" என்ற ஓர் குரல் எழுந்தது! அவன் கனவோ என ஓர்-கணம் நினைத்தான். மறுகணம் அலறிப் புடைத்தெழும் சப்தம்-கேட்டு பின் அடியோடு விழும் சப்தமும் கேட்டது. நச்சுவாடை-மெல்ல வீசியது. அவன் திகைத்தான்! திகில் கொண்டான்! புகை-மண்டலம் அவன் அறையினுள்ளும் புகுந்தது! அவன் "நச்சுப்-புகைக்குண்டு வெடித்து விட்டதே!" என அலறினுன்; அருகே அவனை அணைத்தவாறே படுத்திருந்த அவள் கண் விழித்து, "ஐயோ!" என அலறி அவனைக் கெட்டியாகப் பற்றிக்-கொண்டாள். "கண்ணே! சாவு நம்மை நெருங்கிவிட்டது!

கடைசி முத்தத்தைக் கொடு" என அவன் ஆத்திரத்தோடு கூறினான். "காதலரே! கடைசி முத்தம் பெறுவோம்!" எனக் கண்ணீர் வடியக்கூறினாள் அவள். இதற்குள் புகை மண்டலம் அறைமுழுவதும் நிறைந்து விட்டது. காதலரிருவரும் ஒருவரையொருவர் கட்டியணைத்தவாறே கடைசி முத்தத்தை பரிமாறிக்கொண்ட நிலையிலேயே சாவின் கையிலே சிக்கிவிட்டனர்! இருவருடைய உடலும் உதடுகளும் ஒன்ருகப் பொருந்தியவாறே சாவின் கையிலே சிக்கிவிட்டனர்!! நச்சுப்புகைக் குண்டு வெடித்த காரணத்தினுல் இருவரும் பிணமாகி விட்டனர்! இருவர் மட்டுமா? அன்று அங்கிருந்த கொள்ளைக்காரர்கள் அனைவரும் பிணமாயினர்! ஆம்! நச்சுப்புகைக் குண்டுகளிலே மெழுகுவர்த்தித் தீ படவே, குண்டுகள் வெடித்து, கொள்ளையர்களின் உயிர்களைப் போக்கிவிட்டன. அவள் ஏன் இவ்வாறு செய்தாள்? கொள்ளைக்காரர்களைக் கொல்ல அவள் செய்தது சரி! ஆனுல் அவளும் தன்னை பலியாக்கிக் கொண்டாளே!

கொள்ளைக்காரர்கள் பிணங்களாகக் கிடந்தனர். கொள்ளைக்காரத் தலைவனும் தலைவியுடன் பிணமாகக் கிடந்தான். நச்சுப் புகைக்குண்டுகள் இருந்த இடத்தில் அவர்கள் ஏன் தூங்கினர்? இல்லையானுல் நச்சுப்புகைக் குண்டுகளைத்திருடி வந்திருந்தனரோ? அவர்களுடைய இருப்பிடம் எது? வனமாளிகை! வனமாளிகையா? ஆம்! வனமாளிகையின் வெளிப்புறத்தில் அரசினரின் காவலர் இருந்தாலும், அவர்கள் அறியமுடியாதபடி, கொள்ளைக்காரர்கள் இரகசிய சுரங்கத்தின் மூலம் அம்மாளிகையில் மறைவாக வசித்து வந்தனர்! மேலும் தொடர்க! எல்லாம் விளங்கும்!

வனமாளிகையினுட்புறம் வெடித்த நச்சுப்புகைக் குண்டுகளின் வெடிச்சப்தம் வெளிப்புறமும் கேட்கவே வெளிப் புறக்காவலர் வியந்தபடியே விரைந்தோடினர்; அரசியலாரிடம் வனமாளிகை வெடியோசை

யைப்பற்றி வியப்புடன் கூறினர். அரசியலாரும் ஆச்சரியம் கொண்டனர் அரசியலாரின் பாதுகாப்புப்படை வனமாளிகையை நோக்கி புறப்பட்டது. வனமாளிகையின் வெகுதூரத்தில் செல்லும்போது நச்சுவாடையை அறிந்து கொண்டனர் படையினர். சிலர் நச்சுவாடையினுல் மயக்கமடைந்து விட்டனர். "வனமாளிகைக்கருகில் நச்சுப்புகைக் குண்டு வெடித்திருக்க வேண்டும்" என அரசியலாரின் பாதுகாப்புப்படைத் தலைவர்கள் ஊகித்தனர். நச்சுக்காற்றை நல்ல காற்ருக மாற்றக்கூடிய கருவிகளை முகத்தில் அணிந்துகொண்டனர். ஒவ்வொரு படைவீரனும் அவ்வாறு அணிந்து கொண்டான்.

வனமாளிகைக்கருகில் படை சென்றது. அங்கே, சில கிளிகள், சிலகுயில்கள், சிலமயில்கள், வேறு சிலபறவையினங்கள், சில நாய்கள், வேறு சில மிருகங்கள் முதலியவைகள் இறந்து கிடப்பதைக் கண்டனர் படையினர்; மலர்கள் உதிர்ந்து கிடப்பதையும், செடி கொடிகள் வாடியபடி காட்சியளிப்பதையும் கண்டனர். எங்கும் பிணவாடை வீசியது!

படையினர் வனமாளிகையினுட் புகுந்து தீவிரமாக சோதனையிட்டனர். அச்சோதனையில் இரகசிய சுரங்கவழியும், அங்கமைந்த அறைகளும் தென்பட்டன கொள்ளைக்காரர்கள் யாவரும் பிணமாகக் கிடப்பதையும் படையினர் பார்வையிட்டனர் படைத் தலைவர் கொள்ளையடிக்கப்பட்ட, பொருட்களையும் பார்வையிடும்போது அவர் கண்களில் ஒரு கவசம் தென்பட்டது. கவசத்தின் மீது எழுதப்பட்ட எழுத்துக்களும் தென்பட்டன. படைத்தலைவர் கவசத்தைத் திறந்தார்; அதனுள்ளிருந்த கடிதத்தை யெடுத்தார்

" நாட்டவரே!

நாட்டிலே கொள்ளையடித்து வந்தது நீங்கள் காணும் இறந்து கிடக்கும் கொள்ளைக்கூட்டம் நாட்டு நலனுக்காக பாடுபடும் பதுத்தறிவுப்படை வீரர்களை நச்சுப்புகைக் குண்டால் பழிவாங்க கொள்ளையர்கள் முடிவு கட்டினர். என் துணைவனுக

ஆக்கப்பட்ட கொள்ளைக்காரத் தலைவன் எல்லா ஏற்பாடுகளும் செய்தார். நான் அவரைப் பழி வாங்கி, அவருடைய கொள்ளைக் கூட்டத்தையும் பழி வாங்கவே, அவருடைய காதலியாக நடித்தேன் என் கற்பும் அழிந்துவிட்டது சமயம் பார்த்து எல்லோரையும் பழி வாங்கியதுமல்லாமல் என்னையும் பலியாக்கிக் கொண்டேன். நாசகாலர்கள் அழிந்து விட்டார்கள் இனியாவது நம் நாடு நலம் பெறுமாக!

பகுத்தறிவுப்படை வீராங்கனை"

இவ்வாறு கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது. படைத்தலைவர் வருந்தியவாறே அடுத்த அறையினுட் புகுந்தார். அங்கே அவர்கண்ட காட்சி அவரைத் திகைப்பும் திகிலும் கொள்ளச்செய்துவிட்டது கொள்ளைக்காரத் தலைவனும் பகுத்தறிவுப்படை வீராங்கனையும் ஒருவரையொருவர் தழுவியவாறும் இருவர் இதழ்களும் பொருந்தியவாறும் இறந்து கிடந்தனர். இறந்துகிடந்த இருவருடைய முகங்களையும் கூர்ந்து நோக்கினர் படைத்தலைவர். "ஆ! சமரனா? சமரன் கொள்ளைக் கூட்டத்தின் தலைவன்!" என படைத்தலைவர் வியந்தார். அதைத் தொடர்ந்து அனைவரும் அதே வண்ணம் குரல்களையெழுப்பினர். இதைக் கேட்டவுடன் கடைசியில் நின்று கொண்டிருந்த பாதுகாப்புப்படை வீரக்கிழவர் ஒருவர் முன் வரலானார் அவர் தோற்றத்தில் கிழவரானாலும் அவரிடம் வீரம் வீறு கொண்டிருந்தது. அக்கிழவர் இறந்து கிடந்த இரு காதலரையும் உற்று நோக்கினார்; "ஐயோ! மனோன்மணி!!" என அலற ஆரம்பித்தார். எல்லோரும் திகைத்தனர். "என் மகள் மனோன்மணி! விடுதலைப்படையில் பணியாற்றி விட்டு காணாமற்போன முகிலனின் தங்கை!" என அக்கிழவர் கூறிக்கொண்டே கண்ணீர் விட்டழுதார் முகிலனின் கதியை அவர் எவ்விதம் அறிவார்? படை வீரர்கள் யாவரும் சமரனைத் தூற்றியும் அவன் துணைவி மனோன்மணியைப் போற்றியும் துக்கித்தனர்.

———(●)———

மரமும் முல்லைக் கொடியும்.

வனமாளிகை பிணமாளிகையாகக் காட்சியளித்தது! பிணங்கள் யாவும் அகற்றப்பட்டன! ஆனல் மனோன்மணியின் பிணமும் அவளுக்காக அவளுடைய காதலன் சமரன் பிணமும் ஒரே இடத்தில் புதைக்கப்பட வேண்டும் என நாட்டவர் விரும்பினர். அவள் இறந்து கிடந்த இடத்திலேயே அவளையும் அவள் காதலனையும் அடக்கம் செய்திட வேண்டும் என முடிவு கட்டப்பட்டதற்கிணங்க வனமாளிகைக் கருகிலே பிணக்குழி தோண்டப்பட்டது. ஒரே குழியில் இருவரையும் அடக்கம் செய்திடவே குழி தோண்டப்பட்டது.

குழி தோண்டுமிடத்தில் மண்ணை யெடுத்து வேறிடத்தில் குவிக்கப்பட்டது. தோண்டப்பட்ட இடத்தில் சில எலும்புத்துண்டுகள் தென்பட்டன. அவை மனித எலும்புகளாக இருப்பதைக்கண்டு குழி தோண்டுவோர் அதிசயித்தனர். மேலும் மேலும் மண்ணைத் தோண்டினர்; ஒரு சங்கிலியொன்று மண்ணோடு வந்ததை அறிந்தனர். சங்கிலியின் நுனியில் வட்டவடிவமான நாணயம் போன்ற தொன்று அதனோடு இணைக்கப்பட்டிருந்தது. அது தங்கச்சங்கிலியென நினைத்து குழி தோண்டுவோர் மறைத்து வைத்துக் கொண்டனர்; மேலும் மண்ணைத்தோண்ட ஆரம்பித்தனர். மண்ணோடு மண்ணுக ஒரு மோதிரம் வந்து விழுந்ததையும் அவர்கள் கண்டனர்; அதுவும் தங்கமாக இருக்கலாம் என நினைத்து அதையும் மறைத்து வைத்துக்கொண்டனர். குழி தோண்டி முடிக்கப்பட்டது.

சிறந்த மரியாதையுடன் "சமரன் — மனோன்மணி" பிணங்கள் குழிக்குள் புகுந்தன. மண், குழியை நிரப்பியது. அதோடு அந்த சில எலும்புகளும் மறுபடியும் குழிக்குள் புகுந்துவிட்டன. புதைக்கப்பட்ட இடத்தில் சிறு செடியும் சிறு கொடியும் நடப்பட்டது

நாட்கள் சில நகர்ந்தன. ஒரு நாள் இருவர் அந்த சிறு செடியின் அருகில் வந்தனர். இருவரும் அச்சிறு கொடிக்கும் சிறு செடிக்கும் வணக்கம் செலுத்தினர்; இருவரும் மடியிலிருந்து எதையோ எடுத்தனர் அவர்கள் யார்? அன்று குழிதோண்டி-யவர்கள்! அவர்கள் ஏன் வந்தார்கள்?

ஒருவன், ஒரு சங்கிலியை கையில் வைத்தவாறே பார்த்-தான். அதிலுள்ள நாணயம் போன்றதில் காணப்பட்ட "முகிலன்" என்ற வார்த்தை அவனை நோக்கி கண்ணீர் விட்-டது போலும்! சங்கிலி வைத்திருந்தவன் கண்ணீர் விட்டான்! மற்றவன் தன் கையிலுள்ள மோதிரத்தைப் பார்த்து கண்ணீர்-விட்டான். அம்மோதிரத்தில் காணப்பட்ட "கோகிலம்" என்ற வார்த்தையைக்கண்டு கண்ணீர் விட்டான். சங்கிலியும் மோதிர-மும் சமரன் — மனோன்மணி இருவரை புதைக்கப்-பட்ட குழியிலிருந்து எடுத்தவைகள். மோதிரம் கோகிலாவால் முகிலனுக்கு அளிக்கப்பட்டது! சங்கிலி முகிலனால் கோகிலத்திற்கு அளிக்கப்பட்டது! ஆம்! "சமரன் – மனோன்மணி" புதைக்கப்-பட்ட இடத்தில்தான் அவர்களிருவரும் சமரனால் புதைக்கப்பட்-டார்கள். கோகிலம்—முகிலன் எலும்புத்துண்டுகளாக மாறினாலும் அவர்கள் தங்களுக்குள் வழங்கிய ஞாபகார்த்த சின்னங்கள் அழியவில்லை!

ஞாபகார்த்த சின்னங்களிலே காணப்பட்ட எழுத்துக்கள்-தான் மேற்கூறிய குழிதோண்டியவர்களை அங்கு அழைத்து வந்தது.

இருவரும் இரண்டு சின்னங்களையும் அவ்விடத்தில் புதைத்து விட்டு மறைந்து விட்டார்கள்!

நாட்கள் உருண்டோடின பல வருடங்கள் உருண்டோடி-விட்டன. வனமாளிகை இருவகை நிலையில் காட்சியளிக்க ஆரம்-பித்தது. சிறுகொடியும் சிறுசெடியும் முல்லைக் கொடியாகவும் சிறு மரமாகவும் காட்சியளித்தன. முல்லைக்கொடி மரத்தின்மீது

படர்ந்தபடியே காட்சியளித்தது. அக்காட்சியழகைவிட இதயத்தை இளகச் செய்திடும் — அவைகளுக்கடியில் புதைக்கப் பட்ட கோகிலம் — முகில்ன், மனோன்மணி — சமரன் ஆகிய வர்களின் வரலாற்றுக் காட்சி சிறந்ததன்றோ?

முடிவு பெற்றது.

நல்லது!

"வனமாளிகை" வரலாற்றில் வரும்
பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே.
— ஆசிரியர்.

மதிப்புரை வழங்குவோர் கவனிக்கவும்.

இந்நூல்பற்றிய மதிப்புரை வழங்கப்பட்ட இதழ்கள் இரண்டு, எங்கள் அலுவலகத்திற்கு அனுப்பும்படி, பத்திரிகை-ஆசிரியர்களை பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

"கிரீன்லாம்ப்" பப்ளிஷிங் ஹவுஸ்.

ஸ்ரீ சண்முகம் அச்சகம், தென்காசி. 1—'54.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை	திருத்தம்.
8.	7.	முத்தமிடுகிறது.	முத்தமிட்டது.
12.	22.	முறையற்றம் தீட்டினர்.	முறையற்ற திட்டம் தீட்டினர்.
35.	10.	ஆட்சிப் பொருப்பேற்றிருக்கும்,	ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கும்.

விரைவில் வெளிவருகிறது!

கடவுள் -- விதி நம்பிக்கையால் நலிந்து,
சாதி - சமயச் சதியால் சரிந்து,
மூடப் பழக்க வழக்கத்தால் வீழ்ந்து,
சூழ்ச்சிக்கார பார்ப்பனீயத்தால்
சுடுகாடு நோக்கிச் சென்றுகொண்டிருக்கிற
சமூகத்தை, தடுத்து நிறுத்திட —
தலை நிமிரச் செய்திட —
தன் மானத்தோடு கூடிய பகுத்தறிவுப்
பண்பான வாழ்வை நடத்திடும்படி
செய்திட உதவும்

ஓர் அரிய நூலை,

அறைகூவி அளிக்கிறார்

ஆசிரியர்

எஸ். செல்லப்பாண்டியன்.

ஏ சண்டாளச் சமூகமே!